விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 10 ஞாயிற்றுக்கிழமை (26.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281



ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## மத்திய அரசின் கீழ் பொலிஸ் அதிகாரம் அடுத்த அரசியல் அமைப்பில் அதிரடி

(கொழும்பு)

13-வது அரசியல் அமைப்புத் திருத்தம் மூலம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களை அடுத்த அரசியல் அமைப்புத் திருத்த மூலம் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்படும் என நம்பத் தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் அமைப்பின்படி பொலிஸ் அதிகாரங்களில் ஒரு பகுதி மாகாண சபைகளுக்கும் ஒரு பகுதி மத்திய அரசாங்கத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன. (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்-இந்திய கடற்படைத் தளபதிகள் செப்ரெம்பர்-29 இல் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்படை, இந்திய கடற்படை மற்றும் கரையோரக் காவற் படையினருக்குமிடையில் செப்டெம்பர் 29 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் தமிழக மீனவர்கள் விவகாரமும் அடங்கியிருக்குமென கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல் செனரத் தெரிவித்தார்.

இந்தியா-இலங்கை கடல் எல்லைப்பகுதியில் இந்தியக் கடற்படைக் கப்பலொன்றில் இச் சந்திப்பு நடைபெறும் எனவும் கப்டன் செனரத் தெரிவித் (20 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் சர்வதேச தலைவர்களை நோர்வே ஒப்படைக்க வேண்டும்



## அந் நாட்டுப் பிரதமரிடம் மகிந்த கோரிக்கை

(நியூயோர்க்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்புத் தலைவர்களை இலங்கை அரசிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நோர்வேப் பிரதமர் ஜேன்ஸ் ஸ்டொலன்பெர்க்கிடம் கேட்டுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் 65-வது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த நோர்வேப் பிரதமர் ஜேன்ஸ் ஸ்டொலன்பெர்க்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.நாவுடன் இணங்கிக் கொண்டதை இலங்கை அரசு செய்தாக வேண்டும்

### ஜனாதிபதியிடம் பான் கீ மூன் வலியுறுத்து

(நியூயோர்க்)

கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் துரிதகதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் 65-வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கில் அமெரிக்காவின் நியூயோர்க்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இதன்போது அரசியல் தீர்வுத் திட்டம், நல்லிணக்கம் மற்றும் குற்றச்செயல்களுக்குத் தண்டனை வழங்குதல் போன்ற விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது.

2009 ஆம் (20 ஆம் பக்கம் பார்க்க)

## மிசேல்-சிராந்தி ராஜபக்ஷ நியூயோர்க்கில் சந்திப்பு

(நியூயோர்க்)

இலங்கை-அமெரிக்க நாடுகளின் முதல் பெண்மணிகளுக்கிடையில் நேற்றுக் காலை நியூயோர்க்கில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஐ.நாவின் 65-வது கூட்டத் தொடருக்காக நியூயோர்க்கிற்கு வருகை தந்திருக்கும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த முதல் பெண்மணிகளுக்கு மிசேல் ஒபாமா நேற்று விருந்துபசாரம் வழங்கினார். மிசேல் ஒபாமாவால் நடத்தப்படும் ஸ்ரோன் பார்ன்ஸ் விவசாய மற்றும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலோசனைக் குழு பற்றி பான் கீ மூன் பேசவில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுக்கள் இடம்பெற்ற போதும் ஐக்கிய நாடுகள் சபை அமைத்துள்ள ஆலோசனைக் குழு தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை எனத் இன்னர் சிற்றிப் பிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இன்னர் சிற்றிப் பிரஸ் வெளியிட்டுள்ள செய்தியில்,

ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் மகிந்தவுடன் கலந்துரையாடுவதைப்பான்கீமூன் (20 ஆம் பக்கம்பார்க்க)

## 2 இலட்சத்து 65 ஆயிரம் பேர் வன்னியில் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களில் 2 இலட்சத்து 65 ஆயிரம் பேர் இதுவரை அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக வன்னி கட்டளைத் தளபதியும் வடபகுதி மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பான அதிகாரியுமான மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார். யுத்த சூழ்நிலையின் போது வன்னியிலி ருந்து சுமார் 2 இலட்சத்து 95 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். உலக வரலாற்றில் முதல் தடவையாக மிகவும் குறுகிய காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வன்னியில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றார்.. (ந-5)

## இலங்கையில் நடந்த யுத்தக் குற்றம் விசாரிக்க நீதிமன்றம் அவசியம்

### அமெரிக்கப் பல்கலைக்கழகம் வலியுறுத்து

(வாஷிங்டன்)

இலங்கை தொடர்பில் யுத்தக் குற்ற விசாரணை நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என அமெரிக்காவின் வாஷிங்கனைத் தளமாகக் கொண்ட பல்கலைக்கழகம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள இனத்தின் ஆதிக்கத்தில் இருக்காமல் தனித்த உரிமைகளுடன் வாழக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

அதற்கான சூழல் இலங்கையில் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. எனவே இது இலங்கையில் மீண்டும் இன முறுகல்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தைக் கொண்டுள்ளதாகப்பல்கலைக்கழகத்தின்அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற, (20 ஆம் பக்கம் பார்க்க)

## மரத்தில் இருந்து தவறி வீழ்ந்தவர் மரணம்

கிளிநொச்சி கல்மடு நகரில் இளநீர் பிடுங்குவதற்காகத் தென்னை மரத்தில் ஏறியவர் வீழ்ந்து மரணமானார். நேற்று மாலை 4.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மாவட்ட செயலக அபிவிருத்தி உதவியாளர் துரைசிங்கம் விஜயமனோகர் (வயது-36) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.பிரஸ்தாப நபர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார். (ந-5)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இளம் யுவதியை காணவில்லை

(நெல்லியடி)

அல்வாய் கிழக்குப்பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் கடந்த 20 நாட்களுக்கும் மேலாக காணாமல் போயுள்ளார்.

நெல்லியடி மகா வித்தியாலய வீதியிலுள்ள கணனி நிறுவனம் ஒன்றில் பிரத்தியேக வகுப்பு ஒன்றுக்காக கடந்த 4ஆம் திகதி சென்றிருந்த இவர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

இது குறித்து யுவதியின் தாய் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ந-24)

# செப்பு நாகபாம்பு வைத்திருந்தவர் கைது

(நெல்லியடி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்கு சொந்தமான செப்பில் வடிவமைக்கப்பட்ட நாகப்பாம்புகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் மாலுசந்தி ஆலடி வைரவர் கோவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்றிரவு 7 மணியளவில் ஆலடி வைரவர் கோவில் பாலத்தின் கீழ் சந்தேகமான முறையில் ஒருவர் மது போதையில் துவிச்சக்கர வண்டியுடன் இருந்துள்ளார்.

இவர் மீது சந்தேகம் கொண்ட இளைஞர்கள் அவரை சோதனையிட்ட போது அவரிடம் பெறுமதியான செப்பினாலான நாகபாம்பு உருவங்கள் மற்றும் கோவில் சிலைகள் இருந்ததாகக் கண்டனர்.

இது குறித்து நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதுடன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து சந்தேக நபரை கைது செய்ததுடன் மேற்படி பொருட்களையும் மீட்டனர். இவை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு சொந்தமானதென தெரிவிக்கப்பட்டு வருகின்றது. (ந-3,24)

# இலங்கையில் நடந்த இன அழிவை தடுக்கும் வல்லமை ஐ.நாவிடம் இல்லை

## விரிவுரையாளர் டைனா பார்ஹட் விபரிப்பு

(கொழும்பு)

உலகில் நடைபெறும் அழிவுகளை தடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை செயற்திறன் அற்று உள்ளது.

அதன் செயற்பாடுகள் இலங்கையில் உட்பட பல இடங்களில் தோல்வி கண்டுள்ளதாக த பமிலி செக்குரிட்டி மற்றேர்ஸ் எனப்படும் இணையதளத்தில் எழுதிய பத்தியில் விரிவுரையாளர் டைனா பார்ஹட் கொல்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

அதில் இலங்கை தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

இலங்கையில் கடந்த 26 வருடங்களாக இடம்பெற்ற போர் கடந்த வருடம் நிறைவு பெற்றிருந்தது. பெரும்பான்மை சிங்களவர்கள் அதில் வெற்றி பெற்றிருந்தனர்.

போர் வலயத்திற்குள் தங்கியிருந்த தமிழ் மக்களுக்கு உணவை வழங்காது அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு துன்புறுத்தியே இந்த போர் வெல்லப்பட்டுள்ளது.

இது ஒரு வெளிப்படையான மனித உரிமை மீறல். இன அழிப்பு அங்கு நடந்துள்ளது.

ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் முன் இடம் பெற்ற ஆர்பாட்டங்கள் எல்லாம் செயற்திறன் அற்றுப்போய்விட்டன.

தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் யாரும் கவனம் செலுத்தவில்லை. ஏன் அவர்கள் அவ்வாறு உள்ளனர்? அவர்களுக்கு அதனால் துன்பங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதால்தான்.

காசா, மியன்மார், சீனர்வின் திபெத்து, ஈரான் போன்ற நாடுகளில் இடம் பெறும் வன்முறைகளையும் யாரும் கண்டுகொள்வதில்லையென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அமைச்சுகளுக்கான அதிகாரம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில்

(கொழும்பு)

புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் போது, அமைச்சுகளுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களில் மேலும் திருத்தங்களை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அரச கூட்டுத்தாபனங்கள், சட்டவாக்கச்சபை, மற்றும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களில் நிதி நிர்வாகத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி, நிதியமைச்சின் ஊடாக இந்த அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளதுடன் இது குறித்து, அரசியலமைப்பின் 44ஆவது சரத்தின் (1) (அ) பிரிவிற்கு அமைய 2010 செப்ரம்பர் 17 ஆம் திகதி இலக்கம் 1671 28 என்ற விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர பல அமைச்சுக்களின் அதிகாரங்கள், பொறுப்புக்கள், அமைச்சுக்களுக்கு பொறுப்பான திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்களில் செயற்படுத்த வேண்டிய அதிகாரங்களும், நிறுவனங்களை செயற்படுத்துவதற்கான சட்ட மூலங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரின் கீழ் கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் புதிதாக இணைக்கப் பட்டுள்ளது. இந்த நிறுவனம் இதற்கு முன்னர் அமைச்சர் டளஸ் அழகப்பெருமவின் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கி வந்தது.

அதேபோல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வந்த நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை அமைச்சர் விமல் வீரவன்சவின் நிர்மாணம் பொறியியல் சேவை, வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறான பல அமைச்சுகளின் கீழ் இயங்கிய பல்வேறு நிறுவனங்கள் வெவ்வேறு அமைச்சுகளுக்கு பங்கிடப்பட்டுள்ளன. (ந-5)

## 'அமுதம்' வெளியீடு

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்.புன்னாலைக்கட்டுவன் அ.த.க பாடசாலையின் 80 ஆவது ஆண்டு நிறைவும் அமுதம் மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் த.லோகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்விவலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யா.ஏழாலை மகாவித்தியாலய அதிபர் சிமணியம் புன்னாலைக் கட்டுவன் பிரதேச வைத்திய சாலை வைத்திய அதிகாரி ஆர். திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ந-3)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவகற்கைகள் வணிக பீடத்தின் முதலாவது பேராசிரியராக இளம் வயதில் பதவியுயர்வு பெற்றுள்ள

**கலாநிதி திருநாவுக்கரசு வேல்நம்பி**



அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் இளம் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்ற இவர், வணிகமாணி, முதுதத்துவமாணி, முதுகலைமாணி (தமிழ்) பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தினை சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் சுமார் 40 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும், 10இற்கும் மேற்பட்ட நூல்களையும் வெளியீடு செய்து இப் பீடத்தில் தனித்துவமாக விளங்குபவர். உள்நாட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றினதும் உயர் நிலைப் பட்டங்களுக்கான வெளிநிலைத் தேர்வாளர்களில் ஒருவராகவும் ஆய்வு நெறியாளராகவும் செயற்பட்டு வருபவர். பேராசிரியருடைய பணிக்காலத்தில் பீடம் தழைத்தோங்க உளமார வாழ்த்துகின்றேன்.

பணிவுடன் மாணவன்
சி.சிவகுமார்
ஆசிரியர்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி

(2555)

GERMAN, SWISS மொழி வகுப்புக்கள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றது.
தொடர்புகளுக்கு:- 10, PALALY ROAD, JAFFNA.
T.P. :077 1604823
(2533)

சேவை முகவர்
### காணிகள், வீடு விற்பனைக்கு

சுந்தர்மடம், மணல்தறைலேன், வைமன் றோட், நல்லூர், மருதடி வீதி, பொற்பதி வீதி, பழம்றோட், கோண்டாவில், திருநெல்வேலி, 4, 3, 11/4, 2 பரப்பு அளவுகளில் நல்லூர்,யாழ்ப்பாணம்ஆகியஇடங்களில் விற்கவிரும்புவோர்தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : V.சுந்தரம்
222 9177
0714624830 (2554)

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ வேளாளர் குடும்பம் 1984 இல் பிறந்த உத்தராடம் 1ம் பாதம், உயரம் 5'4" 8இல் செவ்வாய் (மொ.கி.பா 38) உடைய படித்த, மெல்லிய மணமகளிற்கு பெற்றோர் பொருத்தமான மணமகனை வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு :- 0776139307
(2538)




### சித்தா வைத்தியம்

வாதம், அதி இரத்த அமுக்கம், மதுமேகம், அதிக கொழுமை, மெலிவு, பாலியற் குறைபாடு, மாதவிடாய் கோளாறுகள், தோல் வியாதி, வெண் குஷ்டம், சோரியாசிஸ், சிறுவர் கிரந்தி, சளி, முட்டு (தொய்வு) போன்ற சகல நோய்களுக்கும் வைத்திய நிபுணர் பாலசுப்பிர மணியம் அவர்களை வரும் 27,28,29 ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் நேரில் சந்தித்து சிகிச்சை பெறலாம்.

0757390195
0771005971
0779773664
(2542)

முகவரி: டாக்டர் கு.சிவானந்தன்
வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு
சுன்னாகம்.

# IELTS



IELTS brings the world closer to Jaffna

British Council Colombo will conduct IELTS examination sessions in Jaffna on 20 November 2010 & 12 February 2011

At British Council we provide the best starting point, whether you are preparing for or ready to take your IELTS exams. We have over 70 years of experience in teaching English across the globe and we understand exactly what it takes to help you achieve your goals.

At British Council we supply personal infra-red headphones for the listening test which make your test clearer and free from disturbances.

We also offer you the following for free:

- Online resources
- Practice text books & CD-ROMs
- IELTS top tips seminar in Jaffna

You may register at the following institutions:

- British Business School, 140 Temple Road, Jaffna. T 0212225796
- British College of English, 143 Adiapatham Road, Thirunelvely, Jaffna. T 0213216027
- British College of Higher Studies, 15 Sirambiyady Lane, Off Stanley Road, Jaffna. T 0212224550
- Thames International, 664 Hospital Road, Jaffna. T 0115737306

BRITISH COUNCIL

British Council, Colombo
49 Alfred House Gardens, Colombo 00300
T +94 (0) 11 7521521 E info.lk@britishcouncil.org
www.britishcouncil.org/srilanka



# COLOMBO - JAFFNA

## கொழும்பு – யாழ்ப்பாணம்

ESWARRN express

Luxury services Adjustable seat Video Coach Daily services



Rs 1100/- Balloon Bus

கொழும்பிலிருந்து பயன ஆசன முன் பதிவுகள் மெற்கொள்ள

People's Solution

**sentosa**

457, Galle Road Wellawatte.

Call 0777 911 998 Call Us 011 4 888 888



# திருமுருகன் கொம் நெற்

இல.259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் – 021 222 7835

Computer Sales & Repairing



220க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

DHL அங்கீகரிக்கப்பட்ட முகவர்



WESTERN UNION

Money Master

கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் மற்றும் CD,DVD என்பன மிக விரைவாக உங்கள் உறவுகளுக்கு அனுப்பிடலாம்

கிளை நிறுவனங்கள் ✓ "TCN Express" No-2B, Nelson Place, Colombo-6 ✓46 மில் றோட் ,வவுனியா ✓46. ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி ✓பிரதான வீதி, நெல்லியடி ✓ 4. திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி

Debug Authorized Distributor

EPSON EXCEED YOUR VISION

D-Link Building Networks for People

micromax

Authorized Dealer in Jaffna



உங்கள் இல்லங்களை வண்ணமயமாக்கும் உலகத்தரம் வாய்ந்த பெயின்ற்

**Dulux**

AkzoNobel பெயின்ற் வகைகளின் யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்

## சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்

70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

கண்டி வீதி, சாவகச்சேரி

## சிவகுமரன் என்ரபிறைஸ்

75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோகம்

(அல்வாய்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் மீளக்குடியமர்ந்து அங்குள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நேற்று சனிக்கிழமை ஒரு தொகுதி இலவச பாடநூல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் பாடநூல்களை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா பொறுப்பேற்று நாளை திங்கட்கிழமை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வார்.

இதேவேளை பருத்தித்துறை கோட்டத்திற்கு மூன்றாம் கட்டமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 5 ஆயிரம் இலவச பாடநூல்கள் எடுத்து வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2-19)

# உயரப்புலம் குணபாலன் வித்தியாலய பொன்விழா நிகழ்வு

(இருபாலை)

ஆனைக்கோட்டை யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலய 50 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் மாணிக்கம் பாக்கியம் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தொழிலதிபர் மாணிக்கம் சுப்பிரமணியம் , திருமதி மாலதி சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் நூல் வெளியீடு இடம் பெறவுள்ளதுடன் மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வழங்கவுள்ளார். மேலும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-126)

# வாரம் ஒரு தகவல்

## தாத்தாவும் பேரனும்

“ தாத்தா சௌக்கியமா இருக்கிறீங்களா?”

“ இந்தக் காலத்துப் பேரப்பிள்ளைகள் இப்படிக் கேட்பதே மிகவும் அபூர்வம். நீ கேட்கிறாய். ஆமாம், எங்கே புறப்பட்டு விட்டாய்?”

“ ஸ்கூலுக்குப் போறேன் தாத்தா. அதற்கு முன் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்.”

“ அப்படியா? ரொம்ப சந்தோஷம்.”

“ஏன் தாத்தா, இனிப்பு அதிகமாக சாப்பிட்டால் சர்க்கரை வியாதி வருமென்று சொல்கிறார்களே, உண்மையா?”

“அப்படி இல்லையப்பா. ஆரோக்கியமாக இருக்கும் ஒருவர் இனிப்பு சாப்பிடுவதனால் சர்க்கரை வியாதி வந்து விடாது. ஆனால் சர்க்கரை வியாதியுள்ள ஒருவர் இனிப்பு சாப்பிட்டால் அது அதிகமாகிவிடும்.

“ அப்படியா சொல்கிறீர்கள்?”

“ ஆமாம்,இன்சுலின் சுரப்பியானது ஒருவருக்கு சரியாக வேலை செய்து கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் இனிப்புப் பொருளை அதிகமாக சாப்பிடுவதனால் அது செயலிழந்து போய்விடாது. ஆனால் ஏற்கனவே ஒருவருக்கு இன்சுலின் சுரப்பி செயலிழந்திருந்தால் அவர் இனிப்பு பொருட்களைச் சாப்பிட்டால் இடைஞ்சல் அதிகமாகிவிடும். இதுதான் உண்மை”

“இந்த வயதில் இதெல்லாம் நல்லாத் தெரிந்து வைத்திருக்கிறீர்களே.”

“நான் அந்தக் காலத்து எஸ்.எஸ்.எல்.சி. இப்பொழுதும் எல்லாப் புத்தகங்களும் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். தெரிந்துகொள்”

“ நீங்கள் பலே கில்லாடிதான் தாத்தா. அது தான் உடம்பை இவ்வளவு பத்திரமாக வைத்திருக்கிறீர்கள்”

“அதுசரி,சர்க்கரைவியாதியைப் பற்றி என்னிடம் வந்து இவ்வளவு தூரத்துக்கு விசாரிக்கிறாய்?”

“அது வந்து... ஒன்றுமில்லை. இப்பொழுது உங்களுடைய உடம்பில் சர்க்கரை வியாதி இருக்கா இல்லையா என்று...”

“இப்ப இலேசாக இருப்பதாக டாக்டர் சொல்லியிருக்கிறார்”

“அப்படியானால் நீங்கள். இனிப்பு சாப்பிடமாட்டீர்களா?”

“ தொடக்கூட மாட்டேன்”

“அதுதான் எனக்கு வேண்டும்”

“என்ன சொல்கிறாய்?”

“இந்த டப்பாவில் கொஞ்சம் லட்டு இருக்கிறது. உங்களிடம் கொடுத்து விட்டுப் போகிறேன். பின்னேரம் ஸ்கூல் விட்டதும் வந்து வாங்கிக் கொள்கிறேன்”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# முதலாம்வருட மாணவர்களுக்கான ஆரம்ப அறிமுக நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான ஆரம்ப அறிமுக நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதால் மேற்படி அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.(ஸ்ரீ)

# சனசமூக நிலையங்களுக்கான அறிவித்தல்

குடாநாட்டில் கடந்த காலத்தில் நிலவிய அசாதாரண நிலைமையாலும் மக்களது இடம்பெயர்வாலும் குறித்த காலப்பகுதியில் இயங்காதிருந்த சனசமூக நிலையங்களுக்குரிய வருடாந்த நன்கொடைக் கொடுப்பனவுத் தொகையை தமது வைப்புக் கணக்கில் வைத்துள்ள பிரதேச சபைகள் குறித்த சனசமூக நிலையங்கள் மீள இயங்கும் பட்சத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசுடன் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் தீவகம் தெற்கு பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட சனசமூக நிலையங்களை பிரதேசசபையுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ)

# கட்டுரைப் போட்டிகள்

(இருபாலை)

சர்வதேச சிறுவர் , முதியோர் வாரம் மாற்று வலுவுள்ளோர் தினங்களை முன்னிட்டு யாழ். பிரதேச செயலகத்தினால் கட்டுரை , கவிதை , பேச்சுப் போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

இப்போட்டிகள் யாழ். கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-126)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக தொடர் நிகழ்வு இன்று பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் “கிருஷ்ண பக்தி” என்னும் தலைப்பில் குடத்தனை அ.த.க. பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-2-35)

# இராசி பலன்

26-09-2010
(புரட்டாதி 10, ஞாயிற்றுக்கிழமை)
திருதியை முன்னிரவு 7.05 மணிவரை
அச்சுவினி பிற்பகல் 4.05 மணிவரை
இராகுகாலம் 4.32- 6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை

**மேடம்** தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம்மேலோங்கும், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர் , கனவுகள் நனவாகலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சேமிப்பில் சிறிது கரையலாம், மாலை நேரம் இனிய பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், தனவரவுகள் தாராளமாக வந்துசேரும், தொழிலில் ஆர்வம் அதிகரிக்கும், உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் முன்னேற்றமுண்டு, நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்,நல்ல தகவல்கள் வந்து சேரும் நாள்.

**சிங்கம்** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், அடைவு வைத்த பொருளை மீட்கும் எண்ணம் உருவாகும், தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் விலகுவர்.

**கன்னி** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் தேவையற்ற பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். உஷ்ண சம்பந்தமான வியாதி ஏற்படலாம்.

**துலாம்** குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், குடும்பத்தினரிடையே அந்நியோன்யம் ஏற்படும், திட்டமிட்ட பயணங்களால் நன்மை கிடைக்கும்.

**விருச்சிகம்** தேகாரோக்கியம் சீராகி உற்சாகமாக இருக்கும்,பெரியோரின் ஒத்துழைப்பு கிட்டும்,பயணங்களால் பலன் கிடைக்கும், எடுத்த காரியங்களை எளிதில் முடிப்பீர்கள்.

**தனுசு** குடும்பத்தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்ள் நிறைவேறலாம்,புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் ஈடேறலாம்.

**மகரம்** தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், சுப நிகழ்வுக்காக சேமிப்பில் சிறு தொகை கரையலாம், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும் நாள், பிரயாண அனுகூலம் உண்டு, உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், தேகநலன் சீராகி உற்சாகமாக செயற்படுவீர்கள்.

**மீனம்** பேச்சுக்களில் புத்திசாதுரியம் காணப்படும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருள்சேர்க்கையுண்டு, எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 100 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 60 | 60 | 70 |
| பூசணி | 40 | 35 | 50 |
| புடோல் | 50 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 55 | 70 |
| பாகற்காய் | 100 | 80 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 35 | 40 |
| கரணைக்கிழங்கு | 50 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 30 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 50 | 50 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 80 |
| போஞ்சி | 100 | -- | 100 |
| கத்தரி தம்புள்ள | 50 | 30 | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 15 | 20 |
| தேசிக்காய் | 80 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-40 | 30 |

# யுத்தத்தில் சேதமடைந்த வணக்கஸ்தலங்கள் பற்றிய விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

யுத்தத்தின் போது சேதமடைந்த வணக்கஸ்தலங்கள் சம்பந்தமான விபரங்கள் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை அனைத்து மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரையில் கடந்த கால யுத்தத்தின் போது பல வணக்கஸ்தலங்கள் சேதமடைந்த போதிலும் அதில் ஒரு பகுதி தற்போது பொதுமக்கள் தமது நிதியுதவி கொண்டு திருத்தி அமைத்துள்ளார்கள்.

இன்னும் பல ஆலயங்கள் திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் அமைந்த பகுதியிலும் மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்ட போதிலும் மீளக் குடியேறாத பகுதிகளிலும் கூட இத்தகைய நிலைமை காணப்படுகின்றது.

சேதமடைந்த வணக்கஸ்தலங்கள் மற்றும் திருத்தப்படாத நிலையிலுள்ள வணக்கஸ்தலங்கள் குறித்து உரிய ஆதாரங்களுடன் விபரங்களைத் தருமாறு அமைச்சு கோரியுள்ளது.

• ஸ்ரீ


Mangala Show Room

Phoenix The name for plastic
DAMRO
Nilkamal
EVERO
ARPICO
Mangala
Piyestra

போன்ற நிறுவனங்களின் அனைத்து பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன், சகல மூங்கில் தளபாடங்களும், வெளிநாட்டு தளபாடங்கள், சிறுவர்களுக்கான பொருள்கள், சோபா செட் வகைகள் தனியாக 2 மாடியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தரம்! மலிவு!! அமோக தெரிவிற்கு!!! என்றும்....

Mangala Show Room

536, K.K.S. Road, Manokara Junction, Jaffna.
021 222 8367, 0777286069.



STUDY IN UK

மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!

15 வருட அனுபவமிக்க ஆலோசகர்களால் சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் மிகச்சிறந்தமுறையில் ஆவணமுறைப்படுத்தப்பட்டு விண்ணப்பிக்கப்படும்.

யாழ் மாணவர்களின் நலன்கருதி யாழில் WESTMINSTER

UK-London இல் அரச அங்கீகாரமுடைய கல்லூரிகளுக்கு அதிகமான மாணவர்களை கற்கை நெறிகளுக்காக அனுப்பிய பெருமைக்குரிய எங்கள் கல்லூரி யாழ் மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தில்.

- ஒரு வாரத்தில் CAS (College Admission) வழங்கப்படும்.
- IELTS தேவையில்லை, விசேட ஆங்கில வகுப்புக்களுண்டு.
- Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
- மாணவர்களுக்கான ஆலோசனைகள் இலவசம்.

Student Part time Job Arrangement - Accommodation Arrangement

ENGLISH COURSES - விசேட ஆங்கில வகுப்புகள்

- IELTS - Training Classes - (01 Month)
- Certificate in Spoken English - (02 Month's)
- Certificate in General English - (02 Month's)

முற்றிலும் Brittish Council ஆல் பயிற்றுவிக்கப்பட்ட, அனுபவமுடைய ஆசிரியர்களின் வழிகாட்டலில் கற்பிக்கப்பட்டு சர்வதேச பல்கலைக்கழக அங்கீகாரம் கொண்ட சான்றிதழ் வழங்கப்படும்

STUDENT FAMILY SETTLEMENT VISA

www.westminsteredu.com



WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Thirunelveli, Jaffna.
Tele : 0213207778
Mobile: 0771919192



British College of Business Studies

BCBS
Produce Leaders to the Nation
BCBS Campus

PC Hardware Engineering Workshop

Date :- 02.10.2010 and 03.10.2010

Time:- 9.00 AM to 4.00PM

Course Fees:- 4000/=

பாடநெறி முடிவில் United Kingdom Association of Professional (UKAP) இனாலும் BCBS இனாலும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

பதிவுகளை எதிர்வரும் புதன்கிழமை (29.09.2010) இற்கு முன்பாக மேற்கொள்ளவும்.

தொலைபேசி : 0772227393, 0117399600

பாடநெறிக் கட்டணத்தை 2000/= முதலிலும் மிகுதியை சான்றிதழ் பெறும்போதும் செலுத்தலாம்.

London இல் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள

British College of Business Studies (BCBS)

கல்வி நிறுவனமானது,BCBS Campus இனால் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் அமைப்பாகும்.

இலங்கை மாணவர்களுக்கு UK இனால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசதரம் பெற்ற சான்றிதழ்களை கற்கை நெறி முடிவில் BCBS Campus வழங்கி வருகிறது.

எதிர்வரும் சனி ,ஞாயிறு தினங்களில் ஓர் பயிற்சிப்பட்டறையை இது நடாத்த தீர்மானித்துள்ளது. PC Hardware Engineering தொடர்பான இப்பயிற்சிப் பட்டறையில் பலதரப்பட்ட விடயங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

இந்த பயிற்சிப்பட்டறையானது Hardware தொடர்பான ஒரு தெளிவான கண்ணோட்டத்தை அளிப்பதுடன் மாணவர் ஒருவர் தாமே தமக்கு தேவையான கணனியை Assemble செய்ய பயிற்றுவிக்கிறது.

கணனிச் சந்தையில் காணப்படும் போலிகளை வேறு பிரித்து அறியவும் , ஏமாற்றுக்காரர்களின் வலைகளில் விழாமல் தப்பித்துக் கொள்ளவும் இக்கற்கை நெறி வழி செய்கிறது.

இவற்றை விட நாமே ஒரு கணனியை வடிவமைக்க தெரிந்திருப்போமானால் அதுவே ஓர் வரப்பிரசாதமாகும். எமக்கு தேவையான Mother board , Hard disk, Ram போன்றவற்றை நாமே வாங்கி வீட்டில் வைத்து Assemble பண்ண முடியும். இதை ஓர் தொழிலா கக்கூட நாம் மேற்கொள்ள முடியும்.

இப்பயிற்சிப் பட்டறையில் பின்வரும் தலைப்புகளின் கீழ் பாட நெறிகள் நடாத்தப்படும்.

- Computer Hardware-Introduction
- Famating & Installing operating system
- Windows-7
- computer mother board
- computer CPU
- computer memory
- Trouble shooting
- Virus protection

எனவே இக்கற்கை நெறியில் நாட்டமுடையவர்கள் தமது பதிவுகளை புதன்கிழமைக்கு முன்பாக மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## தென்னங்கன்றுகள் விநியோகம்

(வட்டக்கச்சி)

உலக விவசாய ஸ்தாபனத்தினரால் (FAO) கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங் கப்பட் டன.

இதில் கடந்த 21 ஆம் திகதி மேற்படி பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 415 குடும்பங் களுக்கு தலா 5 தென்னங்கன்றுகள் வீதம் 2075 தென்னங்கன்றுகள் கண்டாவளை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (ஸ்ரீ)

# ஈரான் ஜனாதிபதியின் பேச்சுக்கு எதிர்ப்பு; ஐ.நா.கூட்டத்திலிருந்து அமெரிக்கா வெளிநடப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் ஈரான் ஜனாதிபதி முகமட் அகமட் நிஜாத் பங்கேற்று உரையாற்றினார்.

அவர் தனது உரையில் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் வர்த்தகமைய இரட்டை கோபுரங்கள், பெண்டகன் ஆகிய இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் அல்-கொய்தா தீவிரவாதிகளின் தற்கொலை படையினர் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா தெரிவிக்கிறது..

ஆனால் இந்தத் தாக்குதலின் பின்னணியில் அமெரிக்க அரசே உள்ளது என



பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர். இதன் மூலம் நலிந்து வரும் அமெரிக்க பொருளாதாரத்தை நிலை நிறுத்தவும் மேற்கு ஆசியாவில் தனது அதிகாரத்தை நிலை நிறுத்தவும் நடந்த ஏற்பாடு இது. இந்தக் கருத்தை அமெரிக்காவின் பெரும்பாலான மக்களும் அரசியல் வாதிகளும் உலக நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன என்று தெரிவித்தார்.

அவரின் இந்தப் பேச்சு 192 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஐ.நா. சபை கூட்டத்தில் சலசலப்பையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. இதை தொடர்ந்து அவரது இந்தப் பேச்சுக்கு எதிர்ப்பு கிளம்பியது.

இதற்கிடையே கூட்டத்தில் இருந்து அமெரிக்க அதிகாரிகள் வெளிநடப்பு செய்தனர். கனடா மற்றும் ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 27 நாட்டு பிரதிநிதிகளும் கூட்டத்தில் இருந்து வெளியேறினர்.

இதேவேளை ஈரான் ஜனாதிபதி அஹமட் நிஜாத்தின் பேச்சுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது பேச்சு அருவருக்கத் தக்கதொன்றெனவும் நியூயோர்க்கில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாகவும் அகமட் நிஜாடீன் பொறுப்பற்ற கூற்று மன்னிக்கப்பட முடியாததெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனாதிபதியின் கருத்துக்களினால் அந்நாட்டு மக்கள் மீது அமெரிக்கா காட்டி வரும் கரிசணையில் வீழ்ச்சி ஏற்படாதெனவும் பெரும்பான்மையான ஈரானிய மக்கள் புத்திஜீவிகள் எனவும் பிரச்சினைகள் ஆராய்ந்து தீர்மானிக்கக்கூடிய வல்லமை படைத்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஈரானுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் நியாயமானவை என குறிப்பிட்ட அவர் மக்களை தண்டிப்பதற்காக பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டவில்லை எனவும் அரசாங்கத்தின் அணுத்திட்டங்களை வரையறுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# POST OF VICE CHANCELLOR

The Council of the University of Jaffna, Sri Lanka, acting in terms of Section 34 of the Universities Act No.16 of 1978 and subsequent amendments, invites applications/nominations for the post of the Vice Chancellor,University of Jaffna.The successful applicant/nominee will hold office for a period of three years from the date of appoinment or until he/she completes the 65th year,whichever occurs earlier.

The vision of the University of Jaffna is to be a leading centre of excellence in teaching, learning, research and scholarship. Its priorities are serving the country to improve the quality of Higher Education and promote research relevent for the development of the country in general and the Nothern Region in particular.The University has six Faculties and a campus at Vavuniya with another two Faculties, providing professional and accredited degree programmes to a population of opproximately five thousand undergraduate and six hundred postgraduate students.The Vice Chancellor is expected to strengthen and support these activities.

The Vice Chancellor is full-time officer of the University and is the principal Executive as well as the principal Academic Officer.The Vice Chancellor is also the Chief Accounting Officer of the University. He/She is an ex-officio member and the Chairman of both the Council and the Senate.He/She is responsible for the maintenance of discipline within the University. It is the duty of the Vice Chancellor to ensure that the provisions of the Universities Act and of any appropriate instrument are duly observed, and shall excercise all such powers as He / She may deem necessary for the purpose.

The Vice Chancellor shall be responsible for maintaining transparency, accountability and good governance in the management of the affairs of the University.The Vice chancellor should provide academic leadership and is responsible for formulating, introducing and carrying out a streamlined management policy.

The Vice Chancellor shall be person with a vision to carry forward the vision and goals of the University through his/her intellectual as well as managerial brilliance. In addition, the Vice- Chancellor is called upon to identify needs of the nation in terms of national policies of higher education and should be able strengthen the time tested values for the advancement of the University through academic activities including research & development.The applicant/ nominee is therefore expected to be a person of high academic calibre and integrity with a record of outstanding achievements with excellent communication skills along with an ability to stimulate diverse interests of the students and staff alike.

The person who aspires to be the Vice Chancellor of the University of Jaffna should be able to effectively deal with volatile, demanding and stressful situations with tact and competence.She / he should also be able to work long hours depending on the task at hand.

The Vice Chancellor will receive in addition to his salary (which is equivalent to that of a Senior Professor), a 10% entertainment allowance and a residential allowance.

Applications / nominations should be in a sealed cover / envelope addressed to the Secretary to the Council, Office of the Registrar, University of Jaffna. Thirunelvely, Jaffna and either hand delivered or sent under registered cover to reach the above office on or before 09.11.2010 The envelope containing the application / nomination must be marked 'Post of Vice Chancellor' on its top left hand corner.

The following documents should accompany applications/nominations:

i) A copy of the curriculum vitae of the applicant / nominee.
ii) A statement of vision for the development of the University and a brief account of what the candidate/nominee proposes to achieve if appointed.
Where the present incumbent is an applicant / nominee, he/she shall giva a report highlighting his / her accomplishments during his / her (first) period of office and plans for the future.
iii) A letter of consent from the nominee, in case of nomination.
iv) A letter from the employer mentioning whether the applicant / nominee could be released in the event of his / her appointment to the post. (This will apply to applicants / nominees from the Higher Educational Institutions other than the University of Jaffna, Public Service, Corporations and Statutory Boards).

Applications / nominations received after the closing date will not be considered.

Office of the Registrar,
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
25.10.2010

VISVANATHAN KANDEEPAN
Registrar & Secretary to the Counsil
University of Jaffna.

(C-1285)


## தெய்வீக இசைச் சொற்பொழிவு

மட்டக்களப்பு , கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடை பெறும் தேர்த்திருவிழா நாளான இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடி சிவ நெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன் *பாடும் பணி* என்னும் பொருளில் தெய்வீக இசைச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ)

## சர்வதேச நாணய நிதியத்தின் நான்காம் கட்ட கொடுப்பனவு

சர்வதேச நாணய நிதியத்தின் நான்காம் கட்ட கொடுப்பனவுகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கிணங்க 212.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்க சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் இதுவரை 1.274 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளதாக அந்த நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. இதனிடையே சர்வதேச நாணய நிதியத்தினால் 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# விடுதலைப்புலிகளை ஆதரித்தால் உங்களுக்கு பிரச்சினை வராதா?

'தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது'. என்று மத்திய அரசாங்கம் பிறப்பித்த உத்தரவு சரியா... தவறா என்பதை விசாரிக்க ஒரு நீதிபதியைக்கொண்ட தீர்ப்பாயம் டில்லியில்



அமைக்கப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை அந்த நீதிபதி முன்னால், "இந்த வழக்கில் நான் ஆஜராகிறேன்!" என்று வைகோ களத்தில் குதித்திருப்பதும் மத்திய உள்துறையையும் உளவுத்துறை யையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள் ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில் 1991ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த உத்தரவுக்கு தடை நீடிப்பை மத்திய அரசு பிறப்பித்துவருகிறது. இந்த உத்தரவு சரியா தவறா என்பதை ஒரு ஆணையம் விசாரிக்கும். அதில் சம்பந்தப்பட்ட இயக்கம் தனது விளக்கத்தைச் சொல்லும் வசதி சட்டத்தில் உண்டு.

ஆனால்,புலிகள் இயக்கம் ஒரே ஒரு முறை மட்டும் "தங்கள் அமைப்பை தடை செய்யக்கூடாது" என்று சட்டத்தரணி வைத்து வாதாடியது அதன் பின்னர் தொடரவில்லை. பாதிக்கப்பட்ட தரப்பு வராததால் மத்திய அரசாங்கத்தின் உத்தரவையே இந்த ஆணையங்கள் தீர்ப்பாக வழங்கும் நிலைமைதான் இதுவரை இருந்தது.

இந்நிலையில், அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கான தடை உத்தரவு கடந்த மே 14ஆம் திகதி மத்திய உள்துறையினால் பிறப்பிக்கப்பட்டு, வானிலை அரசின் அறிக்கையில் மே17ஆம் திகதி வெளியிடப்பட்டது. டில்லி உயர் நீதிமன்றத்தின் இரண்டாவது நீதிமன்ற நீதிபதி விக்கிரமாஜித் சென், இந்த உத்தரவை விசாரிக்கும் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். விசாரணை கடந்த 21ஆம் திகதி நடப்பதாக இருந்தது. இதைத் தெரிந்து கொண்ட ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ,டில்லி உயர் நீதிமன்றத்திற்கு காலை 10 மணிக்கு சென்றார்.

நேராக நீதிமன்ற பதிவாளர் அறைக்குப் போய் "புலிகள் மீதான வழக்கு எத்தனை மணிக்கு வருகிறது?" என்று அவர் கேட்க.... "மதியம் 3 மணிக்கு!" என்று பதில் வந்தது. விசாரணை நடக்க இருக்கும் நீதிமன்றத்துக்கு வைகோ செல்ல,பரப்பாக ஓடி வந்தார் பதிவாளர். "மதியம் தானே வழக்கு வருகிறது. நீங்கள் ஏன் இப்போதே இங்கு உட்கார்ந்து இருக்கிறீர்கள்? ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்தி விடப்போகிறீர்களா ?" என்று அவர் கேட்க ,"இல்லை! இந்த நீதிபதியை பற்றி தெரிந்து கொள்வதற்காக உட்கார்ந்திருக்கிறேன் என்று விளக்கமளித்தாராம் வைகோ.

## வகையாய் கேட்ட நீதிபதி வழுக்காமல் பதிலளித்த வைகோ!

மதியம் நீதிபதி விக்கிரமாஜித் சென் வந்து உட்கார்ந்ததும்,புலிகள் மீதான தடை வழக்கைத்தான் எடுத்திருக்கிறார்கள். மத்திய அரசின் சார்பில் ஆஜராக வேண்டிய கூடுதல் சொலிசிட்டல் ஜெனரல் வரவில்லை. அவருக்குப் பதிலாக, அவரது ஜூனியர் தான் வந்திருந்தாராம்.

"தடைக்கான காரணத்தை விளக்கி மனுவை மத்திய அரசு சார்பில் தாக்கல் செய்கிறீர்களா?" என்று கேட்க, அவர்கள் இல்லை என்று பதிலளித்திருக்கிறார்கள். "இந்த வாரத்திற்குள் வழக்கை முடித்து விட வேண்டும் என்று நான் கருதிக்கொண்டு இருக்கும் போது மனுத்தாக்கல் செய்யாமல் இருந்தால் எப்படி?" என்று நீதிபதி கேட்டு சில நிமிடங்கள் அமைதியாக இருந்திருக்கிறார்.

அப்போது உஷாரான வைகோ,"விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை நீடிக்கக்கூடாது என்று வாதங்களை வைத்து நான் வந்திருக்கிறேன். என்னைக் கருத்துச் சொல்ல அனுமதிப்பீர்களா?" என்று கேட்டி ருக்கிறார்.

நீதிபதியும் அனுமதி கொடுக்க... அதை மத்திய அரசின் சட்டத்தரணி எதிர்த்திருக்கிறார்.

"எந்த இயக்கம் தடை செய்யப்பட்டதோ அந்த இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிதான் எதிர்வாதங்களை வைக்க முடியும்!" என்று அவர் சொல்ல...."சட்டவிரோத தடுப்புச் சட்டத்தின் படி பாதிக்கப்பட்ட இயக்கத்தின் பிரதிநிதிதான் வாதா முடியும் உங்களுக்கு ஏதாவது அட்சேபனை இருந்தால்,சட்டத்தரணி வைத்து வாதாடுங்கள்!" என்று நீதிபதி சொல்ல... "நானே வாதாடுகிறேன்!" என்று வைகோ பதிலளித்திருக்கிறார்.

"நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளன். அந்த இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்க வேண்டும் என்று சொல்வதற்கு ஆதாரமாக என்னுடைய பேச்சுகளைத்தான் மத்திய அரசாங்கம் தாக்கல் செய்கிறது. அந்த உரிமையில் தான் நான் வாதாடுகிறேன்! என்று வைகோ சொன்னது கண்டு ஆச்சர்யப்பட்ட நீதிபதி," இப்படிச் சொல்வதால் உங்களுக்கு பிரச்சினை வந்து விடக் கூடாது அல்லவா? என்று கேட்டு இருக்கிறார்.

"ஈழத் தமிழனுக்கு இன்று எந்த நாட்டிலும் வாழ வழி இல்லை. அவர்களைக் காப்பாற்ற நாதி இல்லை. விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு சொல்லும் அனைத்துக் காரணங்களையும் உடைக்கும் வகையில் என்னால் பதில் சொல்ல முடியும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையில் அழித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் அவர்கள் இந்த நீதிமன்றத்துக்கு எப்படி வந்து எதிர் வாதம் வைத்து வாதாட முடியும்? இந்தியாவில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டு உள்ளதால் தான் ஈழத்து இளைஞர்களும் இளம் பெண்களும் எந்த நாட்டிலும் நிம்மதியாக வாழ முடியவில்லை!" என்று வைகோ சொல்ல...

"என்ன மாதிரியான கஷ்டங்களை இலங்கைத் தமிழர்கள் அடைத்து வரு கிறார்கள்?" என்று நீதிபதி கேள்வி எழுப்பினாராம்.

"ஈழத் தமிழ் மக்களை அனைத்து நாடுகளுமே புலி இயக்கத்து உறுப்பினர்களாகத் தான் பார்க்கின்றன.

இந்தியா இந்த அமைப்பைத் தடை செய்துள்ளதால் மற்ற நாடுகளும் தடை செய்கின்றன. இலங்கையில் வாழ முடியாத தமிழன் இதனால் மற்ற நாடுகளிலும் வாழ முடிய வில்லை. அதை மீறி நுழைந்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். எந்த நாட்டில் வாழ முடியாமல் விரட்டப்பட்டார் களோ, அதே நாட்டுக்கு மறுபடியும் அனுப்பி வைக்கப்படும் கொடுமை நடக் கிறது. எனவே தடை நீடிப்புக்கு முன் என்னுடைய வாதங்களை கேட்க வேண்டும்" என்று வைகோ சொல்ல... நீதிபதி இதை உன்னிப் பாகக் கவனித்தாராம்.மறுவிசாரணை வரும் போது மறக்காமல் ஆஜராகும் முடிவில் தான் இருக்கிறார் வைகோ.



டெல்லி நீதிமன்றம்

விக்ரமாஜித் சென்

ஜூனியர் விகடன்

ப.திருமாவேலன்

## சேதமடைந்த வீடுகளை திருத்தியமைக்க யு.என்.ஹபிடெட் நிறுவனம் நிதியுதவி

(வட்டக்கச்சி)

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்மடு நகர் கிராம சேவை அலுவலர் பிரிவில் யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்காக யு.என்.ஹபிடெட் நிறுவனம் நிதி உதவி வழங்கியுள்ளது.

கல்மடுநகர் கிராம சேவை அலுவலர் பிரிவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் இந் நிறுவனத்தினால் முதல் கட்டமாக ஒரு குடும்பத்திற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. (ஸ்ரீ)

## கல்முனை சிறைக்கூடத்தின் பொறுப்பதிகாரி இடைநிறுத்தம்

(கொழும்பு)

கல்முனைச் சிறைக்கூடத்தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர் பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன் சிறைக்கூட உத்தியோகத்தர்கள் மூவருக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கைச் சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மாலை அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு கைதிகள் இருவரைக்கொண்டு சென்று தனியார் வான் ஒன்றில் கல்முனைச்சிறைக்கூடத்திற்கு கொண்டுவரும் வழியில் இரு கைதிகள் அட்டாளைச்சேனை,வாழைமுனை பள்ளிவாயலுக்கு அருகில் வைத்து கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றனர்.

இக்கைதிகளை கல்முனைச் சிறைக்கூடத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் போது பொறுப்பதிகாரி உட்பட உத்தியோகத்தர்கள் நால்வரும் கைதிகளுடன் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மேற்படி பொறுப்பதிகாரி காலவரையின்றி பணியில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் மறு அறிவித்தல் வரும் வரை ஏனைய மூன்று சிறைக்கூட உத்தியோகத்தர்களுக்கும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மட்டக்களப்பு சிறைக் கூடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## 2009இல் அரசாங்கம் 20 ஆயிரம் கோடி ரூபா வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளது

### நிதியமைச்சு பாராளுமன்றத்திற்கு அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2009ஆம் ஆண்டில் மாத்திரம் 20 ஆயிரம் கோடி ரூபாவிற்கு அதிகமான வெளிநாட்டுக்கடன்களை அரசாங்கம் பெற்றிருப்பதாக நிதியமைச்சு நேற்று முன்தினம் பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய் மூல விடைக்கான கேள்விநேரத்தின் போது ஜனநாயகத் தேசியக்கூட்டணி எம்.பி. சுனில் ஹந்துன் நெத்தியினால் நிதி அமைச்சிடம் கேட்டிருந்த கேள்விக்கு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலிலேயே இந்தத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிலின் பிரகாரம் கடந்த வருடத்தில் திறைசேரி உண்டியல் நீங்கலாக மொத்தமாக 207761.81 மில்லியன் (20776.18 கோடி) ரூபாவை அரசாங்கம் கடனாக பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2009ஆம் ஆண்டில் மாத்திரம் 23389.86 மில்லியன் (2338.96 கோடி) ரூபா பெறுமதியான வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் மீள செலுத்தியிருப்பதாக அந்தப் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

## அரச நிர்வாக ஆணைக்குழு அடுத்த வாரம் கூடவுள்ளது

(கொழும்பு)

பிரதேச செயலக மற்றும் கிராம சேவகர் பிரிவுகளை மீளமைப்பதற்காக அரச நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சந்திக்கவுள்ளது.

இந்தச் சந்திப்பு ஏற்கனவே கடந்த 7 ஆம் திகதி நடைபெற இருந்த போதும் அது பிற்போடப்பட்டிருந்தது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களினதும் அரசாங்க அதிபர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கைகள் ஆராயப்படவுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலக பிரிவுகளை புதிதாக மீளமைத்து வரையறுப்பதற்கான பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனை பரிசீலிக்கும் பொருட்டு இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன் இதனையடுத்து குறித்த ஆணைக்குழு மற்றும் கிராம எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வது தொடர்பிலான அறிக்கைகளை மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் இருந்து கோரியிருந்தது.

இந்த அறிக்கைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆராயப்படவுள்ளது.

அதன்பின்னர் தமது எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவுகளின் எல்லை மீளமைப்புக்கான ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## தமிழ் மக்கள் நம்பும்வகையில் அரசியல் தீர்வுக்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

### நல்லிணக்க ஆணைக்குழு முன் பிக்கு சாட்சியம்

அனைத்து உரிமைகளையும் பெற்று சக வாழ்வுடன் வாழக்கூடிய வகையில் அரசியல் தீர்வு ஒன்று விரைவில் முன்வைக்கப்படும் என தமிழ் மக்கள் நம்பும் அளவுக்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்று சமயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் காங்கிரஸின் தலைவர் பெல்லன்வில விமலரட்ன தேரர் தெரிவித்தார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான ஆணைக்குழு இது தொடர்பில் ஆழமாக ஆராயவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்துகொண்டு சாட்சியமளிக்கையிலேயே பெல்லன்வில விமலரட்ண தேரர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் உரையாற்றுகையில்,

எதிர்வரும் காலங்களில் நாட்டில் இனங்களுக்கு இடையில் பிரச்சினைகள் வராமல் இருப்பதற்கான பரிந்துரைகளை கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் வைக்கும்போது அதில் நாட்டின் சர்வமத தலைவர்களுக்கும் பொறுப்புகள் வழங்கப்படின் சிறப்பாக இருக்கும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து தரப்பினரும் தங்கள் அரசியல் விடயங்களை பார்த்தனரே தவிர நாட்டை பற்றி சிந்திக்கவில்லை. தமிழ் மொழி சரியான முறையில் அமுல் படுத்தப்படவில்லை என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனால் தமிழ் மக்கள் தங்கள் வேலைகளை செய்துகொள்வதில் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர். தங்களுக்கு பாரிய அநீதி ஏற்படுவதாக உணர்ந்தனர்.

அவ்வாறு அநீதி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது என்பதனை நியாயமான முறையில் ஏற்கின்றோம். ஏன் தற்போது கூட தமிழ் மொழி உரிய முறையில் அமுல்படுத்தப்படவில்லை. அதாவது குறித்த சட்டங்கள் சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதில் குறைபாடுகள் உள்ளன.

எனவே இந்த குறைபாடு விரைவாக தீர்க்கப்படவேண்டும். நாட்டின் ஏனைய பிரஜைகளைப்போன்று தமிழ் மக்களுக்கும் சம உரிமைகள் உள்ளன என்பதனை எடுத்துக்காட்ட மொழிப் பயன்பாட்டை எடுத்துக்கொள்ளலாம்.

நாட்டில் நிர்வாக கட்டமைப்பில் காணப்பட்ட குறைபாடுகளே இனப்பிரச்சினைக்கு காரணமாக அமைந்தது. இதனால் சிங்கள அரசாங்கங்கள் தங்களுக்கு ஒன்றும் செய்யாது என்று வடக்கு தமிழ்இளைஞர்கள் கருதினர்.

யுத்தம் முடிவடைந்து ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் அரசியல் தீர்வு ஒன்று விரைவில் முன்வைக்கப்படும் என்று வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் நம்பும் வகையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

எனவே கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழு தீர்வுத் திட்டம் தொடர்பில் ஆழமாக ஆராயவேண்டும்.

அதுமட்டுமின்றி அனைத்து மக்களும் சம உரிமைகளுடனும் மதிப்புடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்கும் வகையில் அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும். (ஸ்ரீ-2)

## கரடியனாறு வெடிப்புச் சம்பவம் தொடர்பான பொறுப்பினை அரசாங்கம் ஏற்க வேண்டும்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கரடியனாறு வெடிப்புச் சம்பவம் தொடர்பான பொறுப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அனோமா கமகே தெரிவித்துள்ளார்.

இந்த வெடி விபத்தில் பலியானவர்களுக்கு சீன நிறுவனம் நட்ட ஈட்டை வழங்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆபத்து மிக்க பாரியளவு வெடிபொருட்களை அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்துவதற்கு அனுமதித்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு சீன நிறுவனம் பத்தாயிரம் ரூபா நட்ட ஈட்டை வழங்கியுள்ளதாகவும் இவ் நட்ட ஈட்டுத்தொகை போதுமானதல்ல என்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா இர்ண்டு மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வெடிபொருட்கள் களஞ்சியப்படுத்தப்படும் போது பாதுகாப்பு விதிமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்பட வேண்டுமெனவும் ஏனைய கட்டடங்களிலிருந்து 400 மீற்றர் தொலைவில் வெடி பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஓர் சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றிருந்தால் பொறுப்பான அமைச்சர் உடனடியாக பதவி விலகியிருப்பார் எனவும் இலங்கை அமைச்சர்களும் இந்த முன்னுதாரணங்களை பின்பற்ற வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## 2இலட்சத்து 61000 சிறுவர், சிறுமியர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை

(கொழும்பு)

2 இலட்சத்து 61 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என அண்மைய ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

5 முதல் 17 வயது வரையிலான இந்தச் சிறுவர், சிறுமியர் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

5இலட்சத்து 57 ஆயிரத்து 559 சிறுவர், சிறுமியர் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் இதில் 4இலட்சத்து 48 ஆயிரத்து 161 சிறுவர், சிறுமியர் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறுவர் , சிறுமியர் தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் ஆய்வுகள் நடத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# பங்குச்சந்தை பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு: யாழில் தொழில் முயற்சியாளர்கள் உருவாகவேண்டும்

## யாழ்.பல்கலை பேராசிரியர் வேல்நம்பி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து மக்கள் சேமிப்பு பழக்கம் அதிகம் உள்ளவர்கள் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். கடந்த கால அசாதாரண சூழ்நிலையிலும் எங்களுடைய நிலைத்திருப்புக்கு காரணம் இந்த சேமிப்புப் பழக்கமே என யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி தெரிவித்தார்.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளையினரின் ஏற்பாட்டில் பங்குச்சந்தை முதலீடுகள் தொடர்பான கருத்தரங்கு கடந்த புதன்கிழமை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பலரிடம் பணம் இருக்கிறது. அதை அவர்கள் சேமித்துக் கொள்கிறார்கள். இந்தப் பணத்தை எப்படி பன்மடங்காக்குவது என்பது பற்றியே நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்களிடம் இருக்கும் பணத்தைப் பாதுகாப்பதை நாம் சேமிப்பு என்கிறோம். இருக்கும் பணத்தை பல் மடங்காக்கி, அதிகரித்துக் கொள்வதை முதலீடு என்கிறோம். குறைந்த ஆபத்தைக் கொண்டது குறைந்த திரும்பலைத்தரும்; அதிக ஆபத்தைக் கொண்டது அதிக திரும்பலைத்தரும். ஆகையால் எதைத் தெரிவு செய்ய வேண்டும் என்பது முதலீடு செய்பவரின் மனப்பாங்கைப் பொறுத்துள்ளது.

முதலீடு என்று எடுத்துக் கொண்டால் பங்குகளில் முதலீடு செய்யலாம். சொத்துக்களில் முதலீடு செய்யலாம். இன்று யாழ்ப்பாணத்தில் ரியல் எஸ்ரேட் வர்த்தகம் அதிகரித்துள்ளது. நிலம், காணி வியாபாரத்தில் அதிகளவானோர் ஈடுபடுகின்றனர். முதலீடு என்பது எப்போதும் நீண்டகாலத் தேவைகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது பங்குச்சந்தையில் முதலிடுபவர்கள் அதிகமாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதில் மிக விளிப்பாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் அவற்றின் விலை மாற்றங்களை தெரிந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும். இன்று பல நிறுவனங்களின் பங்குகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. முதலீடு என்பது ஒரு பகுப்பாய்வுடன் தொடர்புபட்டது என்பதை மறக்கக்கூடாது. சகல விடயங்களையும் மதிப்பீடு செய்தே முதலீட்டை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கல்வியாளர்கள் அதிகம். ஆனால் நல்ல ஒரு தொழில் முயற்சியாளராக, உரிமையாளராக மாறவேண்டும் என்ற பக்குவம் மிகக்குறைவு.

இந்தியா மற்றும் பங்களாதேஷில் பங்குச்சந்தை பற்றிய விழிப்புணர்வு மிக அதிகம். அந்த நாட்டினுடைய முதலீட்டாளர்கள், கல்வியாளர்கள் உட்பட பங்குச்சந்தை முதலீட்டிலேயே தீவிரமாக இருக்கிறார்கள். அங்குள்ள ஊடகங்கள் பங்குச்சந்தைச் செய்திகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அதில் முதலிட்டிருக்கிறார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பங்குச்சந்தைக் கருத்தரங்கொன்று நடந்தது. அதில் இந்தியாவின் முன்னணி தொழிலதிபர்கள், செல்வந்தர்களது வரலாறுகளைச் சொன்னார்கள். அவர்கள் எப்படி அந்த நிலைக்கு வந்தார்கள் என்று. அவர்களது அடிப்படை பங்குச்சந்தை முதலீடு.

எமது முதலீடுகளை பல வழிகளில் மேற்கொள்ளலாம். யாழில் பலர் நகைகளில் முதலீடு செய்திருக்கிறார்கள். இதுவும் ஒரு நல்ல முதலீடே. காணி, நிலங்களில் முதலீடு செய்துள்ளனர். மற்றையது எமது சேமிப்புக்களில் ஒரு பகுதியை பங்குச்சந்தையை நோக்கித் திருப்பலாம் எனவும் தெரிவித்தார்.

### அறிந்துகொண்டு முதலிடுங்கள்

1985-ம் ஆண்டு கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக் கம்பனி உருவாக்கப்பட்டது. நடவடிக்கையை இலகுபடுத்த 1997 இல் தன்னியக்க வியாபார முறைமை (ATS) முறை கொண்டுவரப்பட்டது. பின்னர் 2008-ல்பங்குச் சந்தையின் சகல தகவல்களையும் உள்ளடக்கிய தன்னிச்சையான அவதானிப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்தது என கொழும்பு பங்குச்சந்தையின் வரலாற்றை விளக்கிய கொழும்பு பங்குப் பரிவர்த்தனை-யாழ்.கிளையின் நிறைவேற்று அதிகாரி மு.திலீபன், தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பங்குச்சந்தை முதலீடென்பது ஒரு இலகுவான விடயம். இக்கருத்தரங்கின் நோக்கம் முதலீடு செய்ய வாருங்கள் என அழைப்பதல்ல. இவ்வாறான வாய்ப்புக்கள் இருக்கின்றன. நீங்கள் அறிந்து கொண்டு முதலிடுங்கள் என்பதேயாகும்.

இலங்கையில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கம்பனிகள் உள்ளன. ஆனால் 237 கம்பனிகளே பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளாக இருக்கின்றன. பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிப் பங்குகளையே பங்குச்சந்தையினூடாக கொள்வனவு செய்யவோ விற்பனை செய்யவோ முடியும்.

பட்டியல்படுத்துவதற்கு முன் தொடர்ந்து 3 வருடங்கள் வரிக்குப் பிந்திய இலாபத்தை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். அதேநேரம் கம்பனி வழங்கிய மூலதனத்தில் 25 வீதத்தை பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்பது நியதி.

அனைத்து பங்கு விலைச்சுட்டி, மிலங்கா விலைச்சுட்டி என்பன தொடர்பாக பொதுமக்களுக்கு ஒரு புரிதல் தேவை. அனைத்துப் பங்கு விலைச்சுட்டி 6750 எனில்,

அதாவது 237 கம்பனிகள் வழங்கிய பங்குகளின் அளவு, அதனை விலையால் பெருக்கி வருவதை 1985 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணக்கிடும் சுட்டி. அதாவது 1985ஆம் ஆண்டு 100ரூபாயை முதலிட்டிருந்தால் அதன் இன்றைய சந்தை விலை 6750 என இதை எடுத்துக் கொள்ளலாம். இதே போல் மிலங்கா என்பது தெரிவுசெய்யப்பட்ட 25 கம்பனிகளை மட்டும் எடுத்துக் கணிக்கப்படுவது.

பங்குச்சந்தையில் முதலிடுபவர்கள் பங்குச்சந்தை வெளியீடுகளை, செய்தி ஊடகங்களை பார்வையிடவேண்டும். இதற்கு மேலாக பங்குத்தரகர்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

### தகுந்த சந்தர்ப்பத்தில் முதலீட்டை மேற்கொள்ளலாம்

இன்று பங்குச் சந்தையிலே அதிகமான முதலீடுகள் வங்கிகளினூடாக வருகின்றன. இதுவரை காலமும் தனியார் வங்கிகள் மாத்திரம் அதிகமான அக்கறை காட்டினார்கள். இப்பொழுது அரசாங்க வங்கிகளும் பணத்தை பங்குச்சந்தையில் முதலிடுகின்றன. ஆகவே எங்களுக்கு பூரண தெளிவிருந்தால் நாங்களே நேரடியாக பங்குச்சந்தையில் முதலீடு செய்யலாம் என யூரோவில் முதலீட்டு நிறுவன முகாமையாளர் வி.நிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

நம்பிக்கை நிதியங்களுக்கும் நல்ல எதிர்காலம் உண்டு. வேல்நம்பி ஒரு விடயத்தைச் சொன்னார், யாழ்ப்பாணம், ஒரு மும்பை பங்குச்சந்தை போன்றது என்று, வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பங்குச்சந்தை யாழ்ப்பாணத்தில் இருந்தே அதிகரிக்க வேண்டும். யாழ்ப்பாணம் தற்போது ஒரு கைத்தொழில் மையமாக (Industrial hub) மாறிக் கொண்டிருக்கிறது. லீசிங், நிதிக் கம்பனிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகிறன. சேவைத் துறையை முன்னேற்றுகிறார்கள். நாங்களும் சேவைத்துறையை முன்னேற்ற வேண்டும். இந்த நாட்டில் மொத்தத் தேசிய உற்பத்தியில் 50 வீதம் மேல் மாகாணத்திலேயே உருவாக்கப்படுகிறது. நாட்டின் தேவையில் அண்ணளவாக 60-70வீதம் சேவைகள், 20 வீதம் கைத்தொழில் துறை, 10வீதம் மாத்திரமே விவசாயம். ஆகவே சேவைப் பொருளாதாரத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டு வரவேண்டும். இங்கு கல்வியறிவுள்ளவர்கள் அதிகம் உள்ளனர்.

உங்களுடைய முதலீடுகளை துறைவாரியாக பிரித்து முதலிடும் போது நட்ட அச்சம் குறைக்கப்படும். நீங்கள் முதலில் பங்குத்தரகரிடம் சென்று CDS கணக்கு ஒன்றை உருவாக்கி, பின்னர் தகுந்த சந்தர்ப்பத்தில் முதலீட்டை மேற்கொள்ளலாம். பங்குச்சந்தை சரிவைக் காணும்போது பங்குகளைக் கொள்வனவு செய்யலாம் என்றார்.

வளர்ச்சிக்குரிய பணத்தை பங்குச் சந்தைகள் பெற்றுக் கொடுக்கின்றன. பங்குச்சந்தை தொடர்பான தவறான எண்ணங்கள் களையப்படவேண்டும். பங்குச்சந்தைச் சுட்டிகள் மூலம் நாட்டினுடைய பொருளாதாரத்தை பார்க்கக் கூடியதாகவுள்ளது என்றார்.

### நிதிநிலையை அறிந்தே கம்பனியில்முதலிட வேண்டும்

சகல வர்த்தகங்களும் ஒரு நிதி நடவடிக்கையே எனவும் கம்பனிகளின் நிதிநிலையை அறிந்தே முதலீட்டை மேற்கொள்ள வேண்டும் என இங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட விரிவுரையாளர் செல்வி ய.லிங்கேசியா தெரிவித்தார். நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வும் அதன் பிரயோகமும் எனும் விடயம் பற்றி மேலும் கருத்துரைத்த அவர்,

ஒரு நிறுவனத்தினுடைய நிதிக்கூற்றுக்களான ஐந்தொகை, வருமான செலவுக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றில் இருந்து கம்பனிகளின் நிதிநிலையை அறிந்தே எந்தக் கம்பனியில் முதலிடலாம், எந்தக் கம்பனி நல்ல நிதிநிலைமையில் இல்லை என்பதை அறிந்து கொண்டு முதலிட வேண்டும் எனத் தெரிவித்தார்.



சி.எஸ்.சி.யாழ்.கிளை நிறைவேற்று அதிகாரி மு.திலீபன் உரையாற்றுவதையும், கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் காணலாம். படங்கள்:என்.குமார்




## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.67 | 113.27 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 174.60 | 178.28 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.16 | 151.79 |
| சுவிஸ் பிராங் | 112.32 | 115.99 |
| கனேடிய டொலர் | 107.09 | 110.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.27 | 108.47 |
| சிங்கப்பூர் டொலர் | 83.70 | 85.75 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.48 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.61 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6457.28 | 6888.49 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6757.50 | 7263.65 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 22 554.75 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** கொழும்பு பார்மசி ( 2915.00), செலிங்கோ இன்சூரன்ஸ்(ஹ)(439.40), பியூப்பிள்ஸ் லீசிங் பைனான்;(196.50), லேக் ஹவுஸ் பிறின்டிங்(167.50), கண்டி ஹோட்டல்ஸ் (310.20).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** வட்டபொற்ட(1000.00), தன்கொட்டுவ (70.90), ஈகியூட்டி (52.10), லக்ஸபான (8.90), திறி ஏக்கர் பார்ம்ஸ்(35.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## எஸ்.எல்.ஐ.ஐ.ரி.நிறுவனம் யாழில் கிளை அமைப்பு

இலங்கையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் முன்னணியில் திகழும் இலங்கை தகவல் தொழில்நுட்பக் கல்வியகம் Srilanka Institute of Information Technology(SLIIT) தனது கிளையை யாழ்ப்பாணத்தில் அமைத்து வருகிறது. அத்துடன் பங்களாதேஷ் நாட்டிலும் தனது கிளையை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

இப் பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அதிசிறந்த தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே இந்த விஸ்தரிப்புகள் இடம்பெறுவதாக எஸ்.எல்.ஐ.ஐ.ரி.நிறுவகத்தினர் தெரிவித்தனர்.

இதுபோன்ற விஸ்தரிப்புக்கள் மூலம் தகவல்தொழில்நுட்பத் துறையில் கடந்த சில ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறந்த தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நோக்கில் எஸ்.எல்.ஐ.ஐ.ரி. சர்வதேச ரீதியில் தனது கிளைகளை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எஸ்.எல்.ஐ.ஐ.ரி.யின் தலைவர் பேராசிரியர் கருணாரத்தன கருத்துத் தெரிவிக்கையில், வெகுவிரைவில் வெளிநாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலங்கையில் தமது கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தவுள்ளோம்.

இது குறித்து எஸ்.எல்.ஐ.ஐ.ரி. யின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் லலித் கமகே கருத்துத் தெரிவிக்கையில், பங்களாதேஷ் விஸ்தரிப்பும் மிகவும் முக்கியமானதாகும். எமது நாட்டில் தகவல் தொழில் நுட்பக்கற்கைகள் மற்றும் வியாபாரக் கற்கைகளுக்கு சிறந்த வரவேற்புக் காணப்படுகிறது என்றார்.




யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள கிளை 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமையவுள்ளது. இங்கு கற்கைகளை முன்னெடுப்பதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திறமை வாய்ந்த பேராசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### கண்கள்
காதல் உருவாக்கும்
கருவறை

### இதயம்
அன்பினை ஏற்கும் ஆயுள்
காப்புறுதி நிறுவனம்

### வார்த்தை
மௌனம் கலையும்போது
மலர்கின்ற மலர்


### பிரிவு
பிரிவு என்பது பலநாள் இறப்பு
இறப்பு என்பது ஒருநாள் பிரிவு

### கண்ணீர்
மகிழ்ச்சியின் உச்சமும்
கவலையின் எச்சமும்
இதுதான்

பற்றுூரான்
பருத்தித்துறை

### கல்லறை
என் உயிரினும் மேலான
காதலியே
நான் உயிருடன்
இருக்கும் போது
மாலை சூட மறுக்கின்ற நீ
நான் மரணிக்கிறேன் உன்
நினைவுகளோடு
என் கல்லறையிலாவது வந்து
மாலை சூடுவாயா

து.வசி
சிறுவையூர் ஜனசக்தி



### யார் நீ?
சூரியனே!
உன் பார்வை
என்னைச் சுடுகிறது
ஆனாலும் உன்
பார்வை பட்டு
மலர்கின்ற தாமரை நான்!
ஒருவேளை நீ
ஹிட்லரின் வாரிசோ?
ஏனெனில்
என்னைப் பார்க்கையிலே
ஏனிந்த சர்வாதிகாரம்?
நீ யேசுவை
சிலுவையிலறைந்த
யூதர் வம்சமோ
உன் காதல் எனும்
ஆணிகொண்டு என்னை
அன்புச்சிலுவையில்
அறைந்துவிட்டாயே!

யோ.கௌதமி
சுதுமலை

### நட்பு
காதலனை
பிரிவதன் வலி
காதலிக்குத் தான் தெரியும்
கணவனைப்
பிரிவதன் வலி
மனைவிக்குத்தான் தெரியும்
பிள்ளையைப்
பிரிவதன் வலி
பெற்றோருக்குத்தான் தெரியும்
நட்பைப்
பிரிவதன் வலி
என் நட்புக்கு ஏன் தெரியவில்லை

கு.சுமித்திரா
சுன்னாகம்




### இமயம் தொட...



மாறும் புது உலகிற்கு
முகம் கொடுக்கப் பழகு
அதற்காய்
எமது பழமையினை
எட்ட வைக்காதே!
எட்டி உதைக்காதே!
பழமைதான்
எம்மையும் எம் இனத்தையும்
அடையாளப்படுத்தும் ஆவணம்.

மாலை. நா.கஜேந்திரா

### நினைவில் மலரும் காதல்
ஒவ்வொரு கணமும் உன்
நினைவுகளை சுமந்தபடி வாழ்கின்றேன்
உன் நினைவுகளே என் வாழ்க்கையின்
கனவாகின்றது உன் நினைவுகள்
அத்தனையும் நிஜமாகவும் இருக்க
உனை நினைந்தபடி
கவிதைக் கலசத்தை தொடர்கிறேன்
ஏன் நினைவுச் சுமையை
இறக்கிவைக்க - நீ
எனக்குள் வருவாயா?

மந்துவில்
டுசிந்தன்





## மௌனத்தின் தேடல் - 37

### வேதனை
பசித்தவர்கள் பாரினிலே
பட்டினியால் படும்
வேதனைகள் யாமறிவோம்
இங்கிவர்கள் பசித்தனால்
பாதியாவது கிடைக்குமென்று
படும் வேதனை யாரறிவார்.

து.ஆதவன்
சிறுப்பிட்டி மேற்கு

### பாடம்
கிடைத்த உணவை
நாமன்று
பங்குபோட்டுக் கொள்வோம்
ஓர் தட்டில்
உணவுண்டு
ஒன்றாக வாழ்ந்தோம்
வன்னிப் போரும்
எம் வாழ்வை
இரு துண்டாக்கிட
இடமிழந்து
கொடிகளாய் வாடுகிறோம்
சிறையிலே

மருதங்கேணியூரான்

### நம்பிக்கைச் சின்னம்!
வாழ்க்கைச் சக்கரத்தில்
வறுமைத்தீ மூண்டதனால்
ஏக்கப் பெருமூச்சு
இதயத்திலிருந்தாலும்
ஏற்றப் பார்வைதனை
இழக்காத செந்தளிரே..
தூரமல்ல உம் விடியல்
துயர் விடுங்கள் நாயகரே!

வி.வினஸ்
பண்டத்தரிப்பு

### உங்களுக்குள்...
பட்ட மரம் மீண்டும்
வளராமல் விட்டாலும்- உங்கள்
அன்பு மரம் எப்போதும்
துளிர்க்கும் -ஏனெனில்
நட்பின் சிகரம் உங்களுக்குள்

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

இரண்டு மனம் இன்று தரணியில்
தழைக்க - தன் உயிருக்காக
உறவுடன் ஊசலாடும்
உண்மை இதுதானா

வி.கஜேந்திரன்
நெல்லியடி.ம.ம.வி

### தூய்மைக்கு ஒரு சாட்சி!
தாய் ஊட்டி விட
உண்டகாலம்போய்
நாய்கள்போல் நடுவீதியில்
நலிந்த இறைச்சித்துண்டொன்றை
வாய்களில் வைத்து வசமாக
வலிந்திழுப் பதிங்கு நாட்டின்
தூய்மைக்கொரு சாட்சியாகும்...

எம்.கே.பாத்திமா றிஸ்லியா
பலாலி ஆசிரியர் கல்லூரி

### தீண்டாட்டம்
வயிற்றுக்குத் தெரியுமா?
வறுமையின் கொடுமை
வயிற்றுக் கொடுமையை
போக்கவே இவர்களின் சமர்

இ.தர்மசாந்தினி
குப்பிளான் தெற்கு


### நட்பு
உலகத்தில் விலை கொடுத்து
வாங்க முடியாத
எம் நட்பு - இது
கின்னஸ் சாதனையை விட
உயர்ந்தது

மு.உசாராணி
நெல்லியடி.ம.ம.வி

### புரிந்திட யாருளர்?
பெற்றோரைப்
பறிகொடுத்தவர்கள்
பிறந்தோரைப்
பிரிந்தவர்கள்
பள்ளிப் பருவத்தினர்
பசியினால் படும்பாடு
பரிதவிக்கும் பெரும்பாடு
புரிந்திட யாருளர்?

தங்கத் தமிழன்
காரைநகர்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 38



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 01.10.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தமிழர்களை பொலிஸ் சேவையில் இணைத்து கொள்வதன் மூலம் விமர்சனங்களை தவிர்க்கலாம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக்கொள்வதன் மூலம் சர்வதேச ரீதியான விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என பிரதி பொலிஸ்மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதன் மூலம் தமிழ் சமூகம் பாரியளவு நன்மைகளை அடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என குற்றம் சுமத்துவோர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் காரணமாகவே இலங்கைப் பொலிஸ் சேவையில் தமிழர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதனை மறந்து விட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் சில ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யுத்த தேவைக்காக 17 ஆயிரம் பேர் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவும் இவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# வடபகுதி மக்கள் சம உரிமைகளையும் சம சந்தர்ப்பங்களையுமே எதிர்பார்க்கின்றனர்

## நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு பகுதி மக்கள் தங்களுக்கு சமத்துவமான உரிமைகளும் சம சந்தர்ப்பங்களும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கின்றனர் எனக் கற்றுக்கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வில் கலந்து கொண்டு பெட்டி வீரக்கோன் சாட்சியமளிக்கையில்,

அவரிடம் கேள்வி ஒன்றை எழுப்பிய ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அந்த வகையில் தலைவர் சி.ஆர்.டி. சில்வா குறிப்பிடுகையில்,

நாங்கள் அண்மையில் வடக்கு பகுதிக்கு விஜயம் செய்திருந்தோம். அங்கு மக்களை சந்தித்து பேசினோம்.

அதன்போது எங்களால் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள முடிந்தது. அதாவது வடக்கு மக்கள் சம உரிமைகளையும் சம சந்தர்ப்பங்களையுமே அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கின்றனர். தாங்கள் விரும்பிய மொழியில் பேசவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

மாறாக அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் அம் மக்கள் அக்கறை கொள்ளவில்லை. மேலும் புதிய சட்டங்கள் தொடர்பிலும் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. இருக்கின்ற சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர் என்ற தொனியில் கேள்வியை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த பெட்டி வீரக்கோன் நீங்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். மக்களின் மனங்களை வெல்வதே முக்கியமாகும் என்றார்.

(ஸ்ரீ-2)

# சன் சீ கப்பலில் சென்ற இலங்கைத் தமிழ் பெண்மணியொருவருக்கு சிறையில் பிரசவம்

(கொழும்பு)

கனடாவின் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்திற்கு எம்.வி.சன்.சீ. கப்பலில் சென்ற இலங்கைத் தமிழ் பெண்மணியொருவருக்கு சிறையில் பெண் குழந்தையொன்று பிரசவித்துள்ளது.

மேற்படி பிரசவத்தையடுத்து அப் பெண்மணி உள்ளூர் வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டதாக மேற்படி அகதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணியான மாலினி டியோனியஸ் தெரிவித்துள்ளார்.

அச் சிறைச்சாலையில் தங்கியிருக்கும் இன்னொரு பெண்ணிடம் இருந்து தனக்கு அதிகாலை 7 மணியளவில் தொலைபேசி அழைப்பு வந்ததாகவும் அதனைத் தொடர்ந்தே இந்த விவகாரம் தனது கவனத்திற்கு தெரிய வந்ததாகவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

அப்பெண்மணி நேற்று தனக்கான குடிவரவு விசாரணையை எதிர்கொள்ள இருந்தார் என்றும் எனினும் அந்த விசாரணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று அவருக்கு குழந்தை பிறந்துள்ளது. மேற்படி பெண்மணியின் கணவன் இன்னொரு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

எனினும் அவர் மனைவியைப் பார்க்க அனுமதிக்கப்பட்டாரா இல்லையா என்பது தெரியவரவில்லை.

இப்பெண்மணி வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டதும் குழந்தைகளும் பெண்களும் தங்கியிருக்கும் இன்னொரு சிறைச்சாலைக்கு மாற்றப்படுவர்.

இக் குழந்தை கனடாவில் பிறந்தபடியால் அக்குழந்தை கனடியக் குழந்தையாகவே கருதப்படும் என்பதோடு பிறப்பின் மூலம் கனேடியக் குடியுரிமையைப் பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எம்.வி.சன்.சீ.கப்பலில் கனடா சென்ற அகதிகளில் இதுவரை சிறுவர்கள் உட்பட 12 பேர் விடுதலையாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஸ்ரீ-2)

# 26.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1580 - சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந்தார்
- 1777 - பிரித்தானியப் படைகள் பிலடெல்பியா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.
- 1907 - நியூசிலாந்து, நியூபவுண்லாந்து இரண்டும் பிரித்தானியப் பேரரசின் டொமினியன்களாயின.
- 1950 - ஐக்கிய நாடுகள் படைகள் வட கொரியாவிடமிருந்து சியோல் நகரை மீண்டும் கைப்பற்றினர்.
- 1950 - இந்தோனேசியா ஐ.நா.வில் இணைந்தது.
- 1954 - ஜப்பானில் இடம்பெற்ற புயலில் சிக்கி கப்பல் ஒன்று மூழ்கியதில் 1,172 பேர் கொல்லப்பட்டனர்.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக்கான தமது ஒத்துழைப்பை அறிவித்தார்.
- 1962 - யேமன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1984 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை சீனாவிடம் கையளிக்க ஒப்புக் கொண்டது.
- 1997 - இந்தோனேசிய விமானம் மெடான் அருகே விபத்துக்குள்ளாகியதில் 234 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - செனெகல் நாட்டு கப்பல் ஒன்று காம்பியாவில் மூழ்கியதில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1833 - சார்ல்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல்வாதி (இ. 1891)
- 1890 - பாபநாசம் சிவன், கர்நாடக இசை அறிஞர் (இ.1973)
- 1908 - பெரியசாமி தூரன், கர்நாடக இசை அறிஞர் (இ. 1987)
- 1932 - மன்மோகன் சிங், இந்தியப் பிரதமர்
- 1981 - செரீனா வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை

### இறப்புகள்

- 1895 - லூயி பாஸ்டர், வேதியியல் அறிஞர் (பி. 1822)
- 1959 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (பி. 1876)
- 1959 - எஜ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, இலங்கை பிரதமர் (பி. 1899)
- 1976 - லாவொஸ்லாவ் ரூசிக்கா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1978 - மான் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1886)

**1987 - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திலீபன் இந்திய அமைதிப்படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து நீரும் அருந்தாமல் உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்தார்.**



# ஈழத்தவர் வரலாறு

47

## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

**ஆதாரவுரை**

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிற்கும், நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் தலவரலாற்றிற்கும் நெருங்கிய பிணைப்புள்ளது. யாழ்ப்பாணநகர், நல்லூர்க் கந்தசுவாமிகோயில் என்பன அமைக்கப்பட்ட காலம், அமைத்தவர் பெயர் என்பன குறித்து யாவரும் ஆதாரமாகக் கொள்ளும் பாடல் ஒன்று யாழ்ப்பாண வரலாற்றின் இலக்கிய ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் கைலாயமாலையின் முடிவில் தனிப்பாடலாக வந்துள்ளது.

*இலகிய சாகாத்த மெண்ணூற் றெழுபதா*
*மாண்டதெல்லை*
*அவர் பொலி மாலை மார்பனாம்*
*புவனேகவாகு*
*நலமிகும் யாழ்ப்பாண நகரி கட்டுவித்து*
*நல்லைக்*
*குலவிய கந்தவேட்குக் கோயிலும்*
*புரிவித்தானே*


இத்தனிப்பாடலிலிருந்து இருவிபரங்கள் புலனாகின்றன. ஒன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக்கட்டியவர் புவனேகவாகு என்ற பெயர் பூண்டவர். மற்றையது, அக் கோயில் சகவருடம் எண்ணூற்றெழுபதாமாண்டில் கட்டப்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக்கட்டியவர் புவனேகவாகு என்பதற்கு இன்னோர் ஆதாரம், ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் எழுதிய யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூலில் காணப்படும் விசுவநாதசாஸ்திரியார் சம்பவக் குறிப்பு ஆகும்.

அது வருமாறு:

*இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா*
*மாண்டதெல்லை*
*அலர்திரி சங்கபோதியாம் புவனேகவாகு*
*நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி*
*கட்டுவித்துக்*
*குலவிய கந்தனார்க்குக்*
*கோயிலொன்றமைப்பித்தானே.*

இச்செய்யுள் கைலாயமாலையில் வரும் தனிச்செய்யுளின் அப்பட்டமான பிரதி. திரிசங்க போதி புவனேகவாகு கோயிலை அமைத்தாரென அறிந்த விஸ்வநாத சாஸ்திரிகள் கைலாயமாலைத் தனிச் செய்யுளில் மாற்ற முண்டாக்கி யாத்துள்ளார். எவ்வாறாயினும் புவனேகவாகு என்பவரே நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய பெருமகன் என்பதில் பாடபேதமில்லை. இன்னோர் ஆதாரமும் இதனை உறுதிப்படுத்தும். நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியமே அதுவாகும்.


நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பழைய தோற்றம்

*'சிறீமான் மஹாராஜாதிராஜ*
*அகண்ட பூமண்டலப்ர*
*தியதிகந்தர விச்றாந்த கீர்த்தி*
*சிறி கஜவல்லி மகாவல்லி*
*சமேத சுப்பிரமண்ய*
*பாதார விந்த ஜநாதிருட சோடக*
*மகாதான சூர்யகுல*
*வம்சோத்பவ சிறீசங்க*
*போதி புவனேகவாகு'*

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக்கட்டிய புவனேகவாகு, இவ்வாறு கோயில் கட்டியத்தில் இன்றும் போற்றப்படுகிறார். இக் கட்டியத்தின் அர்த்தம் வருமாறு :- 'திருவருட்சக்திகளான தெய்வயானையம்மனும், வள்ளியம்மனும் ஒருங்கே பொருந்த வீற்றிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் திருவடித் தாமரைகளை வணங்குபவனும், மன்னர்களுள் மன்னனும், செல்வங்களுடையவனும், மிகப் பரந்த பூமியடங்கலுமுள்ள திசை கள் எல்லா வற்றிலும் பரவிய புகழையுடையவனும், மக்களுடைய தலைவனும், முதலாம் பெரிய தானங்களைச் செய்பவனும், சூரிய குலத்திலே தோன்றியவனும், சிறீ சங்கபோதி என்னும் விருதுப் பெயர் தரித்தவனுமான புவனேகவாகு'

எனவே, கைலாயமாலை கூறும், 'அலர் பொலி மாலை மார்பன் புவனேகவாகு'வும் விஸ்வநாதசாஸ்திரியின் சம்பவக் குறிப்புக் கூறும், 'திரிசங்கபோதி புவனேகவாகு'வும் கோயில் கட்டியம் கூறும், 'சிறீசங்கபோதி புவனேகவாகு'வும் ஒருவரா என்ற வினா எழுகின்றது. பின்னவர் இருவரும் ஒருவரே என்பதில் வரலாற்றறிஞர்களிடையே பேதமில்லை.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை முதன் முதல் கட்டிய புவனேகவாகு என்ற பெயர் கொண்டவர் யார்? கல்வெட்டாதாரங்களும், செப்பேட்டாதாரங்களும் இவர் குறித்துக் கிடையாது விடினும், நூலாதாரங்களும், பதிவேட்டுக் குறிப்பாதாரங்களும் உள்ளன. அவை;

'சிங்கையாரியன் சந்தோஷத்துடனிசைந்து, கலை வல்லசிகாமணியாகிய புவனேகவாகுவென்னும் மந்திரியையும் காசிநகர்க் குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயரெனுங் குருவையும் அழைத்துக் கொண்டு, தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் வந்திறங்கினான்' என யாழ்ப்பாணச் சரித் திரம் என்ற நூலில் ஜோன் கூறுகிறார். 'சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கைப்பற்றி நடத்தி வருகையில் புறமதில் வேலையையுங் கந்தசுவாமி கோயி லையும் சாலிவாகன சகாப்தம் 870 ஆம் வருசத்தில் புவ்னேகவாகு எனும் மந்திரி நிறைவேற்றினான்' என 'யாழ்ப்பாண வைபமாலை' என்ற நூல் கூறுகின்றது. யாழ்ப்பாணக் கச்சேரியில் 1882 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சைவசமயக் கோயில்கள் பதிவேட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது. 'கந்தசுவாமி கோயில், குருக்கள்வளவு என்ற காணியிற் கட்டப்பெற்றுள்ளது. இது தமிழ் அரசன் ஆரியச் சக்கரவர்த்தியின் பிரதம மந்திரி புவனேசவாகரால் 884 ஆம் ஆண்ட ளவில் கட்டப் பெற்றது.' நல்லூர்க்கந்தசுவாமி கோயிலின் பிரதம குருக்களாகவிருந்த சுப்பையர் என்பார், 1811 இல் ஆள்வோருக்கு எழுதிய முறைப்பாடு ஒன்றில், கோயிலைக் கட்டி யவர் பெயர் புவனேகன்கோ (Poovenageangoo) எனக் குறிப்பிட்டுள்ளார்.

(தொடரும்)

## ஜி.எல்.பீரிஸிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அடுத்தமாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்த மாதம் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரேரணை பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கட்சித்தலைவர் கூட்டத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தாம், நாடு திரும்பியதன் பின்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆளும் மற்றும் எதிக்கட்சி தலைவர்களிடம் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## பாராளுமன்றில் இணையத்தை பயன்படுத்துவதற்கு தடை

பாராளுமன்றில் இணைய வசதிகளை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

பாராளுமன்ற அவைக்குள் இணைய சேவை முடக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மடிக் கணனிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், இணைய வசதிகள் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவைக்குள் இணையத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடை குறித்து சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கணனிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட போதிலும், இணைய சேவை முடக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை இவ்விடயம் குறித்து பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் அறிவித்து நடவடிக்கை எடுப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


(ஸ்ரீ-2)


யா/வேலணை மத்திய கல்லூரியில் நவோதயா வார கலை இலக்கிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி அன்னலட்சுமி தனபாலசிங்கம், கல்லூரியின் அதிபர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் கல்லூரி மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட நாடக நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# அயோத்தி பாபர் மசூதி விவகாரம்; அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பு என்ன?

*"இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பது இந்துக்களுக்கும் முசல்மான்களுக்கும் இடையிலானது மட்டுமல்ல... இந்தியாவைத் தனது வீடாக நினைக்கிற அனைவருக்குமானது. அவர்கள் எந்த நம்பிக்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி!"- மகாத்மா காந்தி*

இந்தியா தன் நிம்மதியைத் தொலைத்த நாட்களில் ஒன்று...



1992 டிசம்பர் 6. பாபர் மசூதியை மையம்கொண்டு புதிய கறுப்பு அத்தியாயம் அன்றுதான் ஆரம்பமானது. 18 ஆண்டுகள் கடந்த பின்னரும் இந்து என்றும் முஸ்லிம் என்றும் பிரிவினை வாதம் பேசி, சிலர் பகை நெருப்பை மாறிமாறி வளர்க்க அதுவே காரணம் ஆனது. டிசம்பர் 6-ம் திகதி நெருங்கி வந்தாலே, எல்லா இடங்களிலும் அதிக பொலிஸைக் குவித்தாக வேண்டிய கட்டாயம் வழக்கமும் பழக்கமும் ஆனது.

'அயோத்தியில் இராமர் கோயில் இருந்த இடத்தில்தான் பாபர் மசூதி கட்டப்பட்டது' என்ற ஒற்றை வரிதான் இத்தனைக்கும் காரணம்! சுமார் 60 ஆண்டுகளாக இந்தக் கேள்வியை முன்வைத்து நடந்துவரும் வழக்கில், அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பை நாளை மறுதினம் அளிக்கிறது.

1992 டிசம்பர் 6 ஐப் போலவே 2010 செப்டம்பர் 27ம் இனி வரலாற்றின் மறக்க முடியாத தினமாக மாறப்போகிறது.

'தீர்ப்பு எப்படி அமைந்தாலும்... அமைதி காக்கவேண்டும்'என்று இந்து, முஸ்லிம் சமூகங்களுக்கு இருதரப்பு அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. 'இது இறுதித் தீர்ப்பு அல்ல. நீதியைப் பெற சட்டரீதியாகப் பல படிநிலைகள் உள்ளன' என்று மக்களுக்கு வலியுறுத்தி, அமைதி கார்க்கும் வேண்டுகோளை நாளிதழ்களில் வெளியிட வேண்டியுள்ளது மத்திய அரசு. உ.பி.மாநில அரசாங்கம் ஒரு படிமேலேபோய், மாநிலத்தின் பல இடங்களில் தற்காலிகச் சிறைகளை அமைக்கும் காரியத்தில் இறங்கி உள்ளது. கலவரம் ஏற்படுத்துவோர் எண்ணிக்கை அதிகமானால், அவர்களை அடைக்கச் சிறைகளில் இடம் இருக்காதோ என்ற கவலை!

## இந்தியா தன் நிம்மதியை தொலைத்த 1992 டிசம்பர் 06

**பாபர் மசூதி பிரச்சனையின் முன் கதைச் சுருக்கம் என்ன?**

1528-ம் ஆண்டில் கட்டப்பட்டது பாபர்மசூதி. ஆனால் அங்கு விக்ரமாதித்யன் என்ற இந்து மன்னர் இராமர் கோயிலைக் கட்டி இருந்ததாகவும், பாபரின் தளபதி மர்பாகி, அந்தக் கோயிலை இடித்துவிட்டுத்தான் மசூதியை எழுப்பினார் என்பதும் இந்துத்துவ இயக்கங்களின் குற்றச்சாட்டு. அயோத்தியில் இராமர் பிறந்த இடமும் இதுவே என்கிறார்கள்.

இராமஜென்ம பூமி முக்தியக்ஞ சமிதி என்ற இந்து அமைப்பின் செயலாளரான ஜஸ்டிஸ் தேவகி நந்தன் என்பவர், 'கஸாதி எனப்படும் 84 தூண்களைக்கொண்டு இராமர் கோயில் இருந்தது. இப்போது உள்ள மசூதியிலும் அதே மாதிரியான தூண்கள் உள்ளன' என்கிறார். 1853-ம் ஆண்டே இராமர் பிறந்த இடம் தொடர்பாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மோதல் நடந்து 75 பேர் கொல்லப்பட்டனர். 1857-ம் ஆண்டு இந்து சாமியார் ஒருவர், பாபர் மசூதிவளாகத்தில் ஒரு சிறுபகுதியில் இராமர் கோயில் அமைத்தார். அப்போதைய பிரிட்டிஷ் அரசு, இந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனியே வழிபாடு நடத்துவதற்கு வசதியாக சுவர் ஒன்றைக் கட்டியுள்ளது. ஆனாலும் அமைதி இல்லை.

1949-ம் ஆண்டு டிசம்பர் 23 அன்று முஸ்லிம்கள் பாபர் மசூதியில் இரவுத்தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீடுகளுக்குச் சென்றனர். மீண்டும் அதிகாலைத் தொழுகைக்காக வந்தபோது இராமர், சீதை, இலட்சுமணர் சிலைகள் வைக்கப்பட்டு இருந்தன. அன்றைய பிரதமர் நேரு பதறிப்போனார்.

"அயோத்தியில் நடந்தவை என்னுடைய அமைதியைக் குலைத்துள்ளது. மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான முன்னுதாரணம் ஒன்று அங்கே ஏற்படுத்தப்பட்டுள்ளது"- நேரு ஒரு தீர்க்கதரிசிதான் என்பதும் அவரின் பயம் நியாயம் நிறைந்தது என்பதையும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நடந்த சம்பவங்கள் நிரூபித்தன.

வெறுமனே மதவாதிகள் மட்டுமே பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கவில்லை. பாபர் மசூதிப் பிரச்சினையைத் தங்கள் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்காக நேருவுக்குப் பின் அமைந்த அரசுகளும் பயன்படுத்திக்கொண்டன என்பதுதான் சோகமானது. 1983-ம் ஆண்டு பாபர் மசூதி உள்ள இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற இயக்கத்தை, விஸ்வ இந்து பரிஷத் தொடங்கியது. இந்துக்களும் சென்று வழிபடுவதற்கு வசதியாக, பாபர் மசூதி கதவுகளைத் திறந்து விடும்படி, பைஜாபாத் மாவட்ட நீதிபதி கட்டளையிட்டார். பாபர் மசூதி அருகே இந்து கோயில் கட்ட ராஜீவ் காந்தியின் அரசாங்கம் அனுமதி அளித்தது. பின்னர், நடந்த கலவரங்களில் சுமார் 500 பேர் இறந்தனர்.

40 ஆண்டுகளுக்குப் பின்னர் பாபர் மசூதி அமைந்துள்ள இடத்தில் இராமர் கோயிலைக் கட்டியே தீருவது என்று விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பு தொடங்கிய முயற்சிகளின் முடிவுதான் கறுப்பு டிசம்பர் 6.

இந்து ஆதரவு அமைப்புகள் இதைக் கையில் எடுத்து இராமர் சிலையைப் பூஜை செய்து அதைக் கிராமங்கள் தோறும் ஊர்வலம் நடத்தியதும், இதற்காக ஒவ்வொரு இந்துவும் குறைந்தபட்சம் ரூ 1.25 தர வேண்டும் என்றதும், செங்கல் சேகரிப்பு நடத்தியதும், அத்வானி இரதம் விட்டதும், அதைப் பிரதமர் வி.பி.சிங் தடுத்ததால் அவரது ஆட்சியை பி.ஜே.பி.கவிழ்த்ததும், அனைவரும் அறிந்த விடயங்கள்.

அத்வானி இரத யாத்திரையை அறிவித்த செப்டம்பர் 1-ம் திகதிக்கும் நவம்பர் 20-க்கும் இடையிலான காலத்தில், இந்தியா முழுவதுமான 116 வகுப்புக் கலவரங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 564 .அயோத்தி அமைந்திருக்கும் உத்திரப்பிரதேசத்தில் இறந்தவர்கள் மட்டும் 224 என்று சொல்கிறது ஒரு புள்ளிவிபரம்.

கிட்டத்தட்ட ஒரு உள்நாட்டு யுத்தத்துக்கான நெருக்கடியை இந்தியா சந்தித்தது. அதன் உச்சக்கட்டம்... அந்த டிசம்பர் 6. அன்றைய தினம் பகல் 12.15 மணிக்கு இராமர் கோயிலைக் கட்டும்பணிகள் தொடங்கும் என்று அறிவித்தார்கள். அதற்காக, விசுவஹிந்து பரிஷத், பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ் இயக்கங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர். அருகிலேயே பிரமாண்ட பொதுக்கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.



கூட்டத்தில் தலைவர்கள் பேசிக் கொண்டு இருந்தபோது, கூட்டத்தின் ஒரு பகுதியினர் 'ஜெய் ஸ்ரீராம்' என்று முழங்கியபடி, பாபர் மசூதி வளாகத்தை நோக்கிப் பாய்ந்து சென்றனர். பொலிஸாரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. தடியடி நடத்தி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினார்கள். அதற்குப் பலன் இல்லை. பின்னர் நடந்ததை நாடறியும்.அன்று இந்தியாவின் மதச்சார் வழிபாட்டுத் தலம் இரண்டு மணி நேரத்தில் இடித்துத் தள்ளப்பட்டது.

அயோத்தியில் எரிந்த தீ, அடுத்து நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பரவியது. டில்லி, மும்பை, ஜெய்ப்பூர், ஐதராபாத் போன்ற நகரங்களில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்று ஒரே நாளில், 233 பேர் பலியானார்கள். அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 68 பேர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நடந்துகொண்டு இருக்கிறது. மத்திய அரசால் லிபரான் கமிஷன் அமைக்கப்பட்டது. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி போன்றவர்கள் மீது அந்த கமிஷன் குற்றம் சாட்டியது. ஆனால், அதன் மீது இதுவரை மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில்தான் அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு! பிரச்சினைக்கு உரிய சில ஏக்கர் நிலம் இந்துக்களுக்கு உரியதா, முஸ்லிம்களுக்கு உரியதா என்பதைத் தீர்ப்பு சொல்லட்டும். ஆனால், அன்பும் சகோதரத்துவமும் அமைதியும் நல்லிணக்கமும் இரு தரப்புக்கும் உரியது என்பதைக் காலம் சொல்லட்டும்.

இந்திய தேசத்தின் உள்நாட்டு அமைதியைக் காக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஏனென்றால், இந்தத் தேசம் நம் அத்தனை பேரின் சந்ததிக்கும் சொந்தமானது!

**ஆனந்த விகடன்**

திரை விமர்சனம்

# துரோகி



பெண் இயக்குநர்கள் என்றால் மென்மையான கதையை இயக்குபவர்கள் என்ற மரபுகளை உடைத்து முதன் முறையாக சுதா. கே. பிரசாத் இயக்கியிருக்கும் பக்கா ஆக்‌ஷன் படம் துரோகி. ஸ்ரீகாந்தும், விஷ்ணுவும் வடசென்னையின் நெரிசலான பகுதியில் பிறந்து வளரும் நண்பர்கள். தங்களது அன்பான டீச்சர் பூஜாவை, லோக்கல் தாதா ஒருவன் கொலை செய்ய, அவனை தூக்குகிறார்கள். கொலை செய்தது விஷ்ணுதான் என்று ஸ்ரீகாந்த் காட்டிக்கொடுக்கிறார். இருவருக்குள்ளும் விரோதம் வளர்கிறது. படிக்க ஆசைப்படும் ஸ்ரீகாந்த், தாதா தியாகராஜனிடம் சேர்க்கிறார். படிப்பில் ஆர்வம் இல்லாத விஷ்ணு, ஐ.பி.எல் அதிகாரியாகும் இலட்சியத் தோடு இருக்கிறார். இரு பெரும் துருவங்களான இருவரும் ஒருவருக்கொருவர் எப்போதும் மோதிக் கொண்டிருக்கிறார்கள். காலை வாருவதும் கழுத்தைப் பிடிப்பதுமாக நகரும் இவர்கள் வாழ்க்கையில் ஒரு திருப்பம். விஷ்ணு ஐ.பி.எஸ் அதிகாரியாகவும், ஸ்ரீகாந்த் தாதாவாகவும் எதிரெதிர் களத்தில் நிற்கிறார்கள். இறுதி வெற்றி யாருக்கு என்பதை பரபரப்பான திருப்பங்களோடு சொல்வது மீதிக்கதை.

வடசென்னை வாழ்க்கையை சினிமா சாயம் பூசாமல் சொல்ல முயற்சித்திருக்கிறார் இயக்குநர். ஆனால் சிறுவர்களின் பேச்சிலும், நடவடிக்கையிலும் பிஞ்சில் பழுத்த சினிமாத்தனம் இருக்கிறது. நடுரோட்டில் கொலைசெய்துவிட்டு இரத்தக் கத்தியுடன் நிற்கும் தாதாவிடம் 12 வயது சிறுவன் "நான் உங்கிட்ட சேரணும், இந்த ஊரே என்னைப் பார்த்துப் பயப்படணும்" என்று சொல்லி நிற்பதும், தாதாவும் அவன் கையில் கத்தியைக் கொடுத்து சேர்த்துக்கொள்வதும் சிறுவர்களின் மனதைக் குதறிப் போடும் காட்சி.

சிடுசிடுவென்றிருக்கும் இராயபுரம் இளைஞன் வேடத்துக்கு கச்சிதமாகப் பொருந்துகிறார் விஷ்ணு. மூக்கு உடைக்க ஸ்ரீகாந்துடன் மோதும் போதும், பொலிஸ் அதிகாரியாகி கடுமை காட்டும்போதும், காதலி இறந்துவிட்டதாக கதறும்போதும் விஷ்ணு நடிப்பில் முதிர்ச்சி. மென்மையான கேரக்டர்களில் வலம் வந்த ஸ்ரீகாந்த், முதன் முறையாக அழுக்குப் பையனாக அவதாரம் எடுத்திருக்கிறார். பொடி லாங்குவேஜும் வசன உச்சரிப்பும் அவரை நிஜ தாதாவாக மாற்றுகிறது. ஆக்‌ஷன் ஹீரோவுக்கான அத்தனை தகுதியும் தனக்கு உண்டு என்பதை நிரூபித்திருக்கிறார். ரயில் தண்டவாளத்தில் கட்டிப் போடப்பட்டிருக்கும் அவர் ஒவ்வொரு ரயில் கிராசாகும் போது எழும்பும் மரண ஒலியும், உயிர் தப்பும் போது ஏற்படும் திருப்தியும், விஷ்ணுவால் காப்பாற்றப்படும் போது "இதற்கு நான் செத்தே போயிருக்கலாம்" என்று வெறுப்புக் காட்டுவதும் அபாரம். மகன் கெட்டவன் என்பதை அறிந்து என் இரத்தம் இவ்வளவு அழுக்கா என்று கேட்கும் வித்தியாசமான தாதாவாக தியாகராஜன் நீண்ட நாட்களுக்குப் பிறகு ரீ என்ட்ரி கொடுத்திருக்கிறார்.

அன்பான ரீச்சராக பூஜா மனதில் பதிகிறார். பூனம் பஜ்வா வழக்கம் போல காதல் கம் கவர்ச்சி வேஷம் கட்டுகிறார். ஸ்ரீகாந்தை வலிந்து மிரட்டி காதலிக்கும் தெனாவெட்டு பெண்ணாக பூர்ணா. ஒளிப்பதிவும் இசையும் ஆக்‌ஷன் படத்துக்கான பங்கைச் சரியாக செய்திருக்கிறது. இரு இளைஞர்கள் ஒருவர் மீது ஒருவர் அளவுகடந்த அன்பாகவும், அளவுகடந்த பகையாகவும் இருக்கிறார்கள் என்ற ஒரு வரி கதைக்கு விறுவிறுப்பான திரைக்கதையை எழுதியிருப்பதிலும், அதை படமாக்கியிருப்பதிலும் இயக்குநர் தெரிகிறார்.

ஆக்‌ஷன் கதையில் லொஜிக் பார்க்கவேண்டாம் தான். ஆனாலும் சிறுவர்களின் வன்முறை, ஐ.பி.எஸ். செலக்சனுக்குச் சென்ற ஒருவனை செலக்‌ஷன் அதிகாரி ரவுடிகளை, களை எடுக்க அனுப்புவது, டீச்சரை கொலை செய்த இளைஞனை, ஒரு போன் அழைப்பில் விடுதலைசெய்வது, தாதா அரசியல் கட்சி தொடங்கி தேர்தலில் நிற்பது, எந்தக் கொலையையும் பொலிஸ் கண்டுகொள்ளாமல் இருப்பது, தாதா கூட்டத்துக்கிடையே பொலிஸ் சமாதானம் செய்துவைப்பது போன்றவை லொஜிக் கொலை.

## வில்லனாக அறிமுகமாகிறார் பிரகாஷ்ராஜ் தம்பி



ராயல் மூன் பிக்சர்ஸ் சார்பில் சி.எம். கே.பாருக் முகமது மற்றும் எல். புருஷோத்தமன் இணைந்து தயாரிக்கும் படம் படைசூழ. ஏ.எஸ். பிரபு இயக்கும் இப்படத்தில் கணேஷ் பிரசாத் ஹீரோவாக நடிக்க, அவருக்கு ஜோடியாக வர்ஷினி நடிக்கிறார். கல்லூரி மாணவர்களுக்கும், ஒரு ரவுடிக்கும் இடையே ஏற்படும் மோதல்தான் படைசூழ படத்தின் மொத்தக்கதையும். இதில் தாதாவாக நடிகர் பிரகாஷ்ராஜின் தம்பி பிரசாத்ராஜ் நடிக்கிறார். அண்ணனைப் போல, தமிழ் திரையுலகில் வில்லனாக அறிமுகமாகும் பிரசாத்ராஜ், உருவத்தில் அண்ணனின் சாயலைக் கொண்டவராக இருந்தாலும், நடிப்பில் தனக்கென்று ஒரு பாணியை இந்தப் படத்தில் பின்பற்றியிருக்கிறாராம்.


## எந்திரனின் அதிரடி ஆரம்பம்...

எந்திரன் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டதுதான் தாமதம்... டிக்கெட் விற்பனை மின்னல் வேகத்தில் நடந்து முடிந்து வருகிறது. இந்த அதிரடியான டிக்கெட் விற்பனை சாதனை தொடங்கியிருப்பது அமெரிக்காவில். அங்கு அட்வான்ஸ் டிக்கெட் புக்கிங் தொடங்கிய பத்தே நிமிடத்தில் எந்திரனின் ஒருவாரத்துக்கான மொத்த டிக்கெட்டுக்களும் விற்பனையாகியுள்ளன.

இசை வெளியீடு தொடங்கிய 2 மணிநேரத்தில் அத்தனை பாடல் சிடிக்களும் விற்பனையாகி தனது முதல் வசூல் சாதனையைத் தொடங்கிய எந்திரன் இன்று அட்வான்ஸ் டிக்கெட் புக்கிங்கிலும் தனது வசூல் வேட்டையை ஆரம்பித்துவிட்டது.

வட அமெரிக்காவிற்கான முதல் ஒருவாரத்துக்கான எந்திரன் டிக்கெட் முழுவதும் நியூயோர்க்கில் உள்ள ஜாக்ஸன் ஹைட்டில் டிக்கெட் விற்பனை கவுண்டர் திறக்கப்பட்ட அடுத்த 10 நிமிடங்களில் அட்வான்ஸ் புக்கிங்கில் விற்பனையாகியுள்ளது.

அமெரிக்காவில் வெளியாகும் இந்தியப் படங்களுக்கான டிக்கெட் விற்பனை,



வெளியாகும் திகதிக்கு ஒரு வாரத்துக்கு முன்புதான் ஆரம்பமே ஆகும். ஆனால் எந்திரனுக்கான டிக்கெட் விற்பனை 10 நாட்களுக்கு முன்னதாகவே களை கட்டிவிட்டது. (யாரு படம் சுப்பர் ஸ்டாரு படமுல்ல...)


அமெரிக்காவில் இதுவரை எந்த ஒரு இந்தியப் படத்துக்கும் இத்தனை வேகமாக டிக்கெட்டுக்கள் விற்பனையானதில்லையாம். அந்த வகையில் மிகப் பெரிய சாதனையை எந்திரன் படைத்துள்ளது.

எந்திரன் சாதனை கவுண்டிங் ஸ்டார்ட் ... அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் சீனா... உலகமெங்கும்.

## கைமாறிய அஜித் கதைக்கு சூர்யா ஹீரோ ஆனார்!


அஜித் பல படங்களை மறுப்பு தெரிவிக்க அந்த படங்கள் அனைத்தும் சூர்யாவிடம் கைமாறியது. மேலும் அந்த படங்கள் அனைத்தும் சுப்பர் ஹிட்டானது. சூர்யாவின் காக்க... காக்க, கஜனி மற்றும் ஆர்யாவின் நான் கடவுள் என பல படங்கள் அஜித்திற்காக எழுதப்பட்ட கதைகள்.

எல்லா இயக்குநர்களின் செல்ல ஹீரோவாக மாறிவரும் சூர்யாவிற்கு தற்போது அஜித் கைவிட்ட படத்திற்கு ஹீரோவாக நடிக்கிறார் என கோலிவுட் பக்கம் ஒரு பேச்சு நிலவுகிறது. அது என்ன படம் தெரியுமா?... கௌதம் மேனனின் துப்பறியும் ஆனந்த்.



துப்பறியும் ஆனந்த் என்ற படத்தில் இணைவதாக இருந்த அஜித்தும் கௌதம் மேனனும் இப்போது திடீரென பிரிந்து விட்டனர். அஜித்துக்காக கௌதம் மேனன் தயார் செய்த கதைதான் துப்பறியும் ஆனந்த். இதில் அஜித் துப்பறியும் நிபுணராக நடிப்பார் என கூறப்பட்டிருந்தது. ஆனால் இவர்களுக்கு இடையே ஏற்பட்ட சலசலப்பு காரணமாக படம் கைவிடப்பட்டது. சூர்யாவுக்கு ஜோடியாக எமிஜாக்சன் நடிப்பார் எனத் தெரிகிறது.

படத்திற்கு இசை ஏ.ஆர்.ரகுமான் அமைப்பாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!




## அஜித் ரசிகர்கள் ஆடும் மங்காத்தா ஆட்டம்...




அஜித்தின் 50 ஆவது படமாக மங் காத்தா அமைந்தாலும் அமைந்தது அதன் உள்ளே வெளியே ஆட்டம் விதவிதமாகத்தான் இருக்கு.

அஜித், நாகர்ஜுன், பிரேம்ஜி அமரன், கணேஷ் வெங்கட்ராமன், லட்சுமிராய் இன்னும் மிகப் பெரிய நடிகர் பட்டாளம் சேர்ந்து ஆடும் ஆட்டம் தான் மங்காத்தா நேற்று வரை இருந்த நீது சந்திரா தற்போது அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். நீதுவின் ஹீரோயின் நாற்காலி காலிசெய்யப்பட்டு திரிஷாவுக்கு கொடுக்கும் வேலை நடந்து வருகிறது.

கிரிக்கெட்டில் பாகிஸ்தான் வீரர்கள் ஆடிய மேட்ஸ் பிக்ஸிங் சூதாட்டத்தில் நீது சந்திராவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேக விசாரணையின் தாக்கம் தான் அவரை மங்காத்தா ஆட்டத்திலிருந்து நீக்கி விட்டது. இதனால் உள்ளே திரிஷா..... வெளியே நீது சந்திரா.


மங்காத்தாவில் சிம்பு கெஸ்ட் ரோலில் வருகிறார். அஜித் ரசிகன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் சிம்பு சிலம்பாட்டத்தில் பில்லா அஜித் கெட்டப்பில் வந்து கலக்குவார். இந்தப் படத்தில் நடிக்க வேண்டும் என வெங்கட் பிரபு கேட்டவுடன் சம்மதம் தெரிவித்து விட்டார் சிம்பு. ஏற்கனவே வெங்கட் பிரபு இயக்கிய 'கோவா' படத்தில் கிளைமாக்ஸில் மன்மதன் சிம்புவாக தோன்றுவார். அதே போல் இந்தப் படத்தில் அஜித்துடன் ஒரு காட்சியில் சேர்ந்து நடிக்கிறார். இந்தப் படம் தமிழ், தெலுங்கு என்று இரு மொழிகளிலும் ஒரே நேரத்தில் எடுக்கப்படுகிறது. தெலுங்கு மங்காத்தாவில் ஹீரோ நாகர்ஜுன். தமிழில் நாகர்ஜுன் நடிக்கும் கதாபாத்திரத்தில் தெலுங்கில் அஜித் நடிக்கிறாராம். இப்படியான விடயங்களுக்கு மத்தியில் இப்போது புதுசா ஒரு சுவாரசியம் மங்கத்தா ஆட்டத்தில் சேர்க்கப்படுகிறது....

மங்காத்தா பட பூஜையே போட்டோ ஷூட்டுடன் தான் தொடங்கப்பட்டது. அப்போதே டிரெய்லரையும் தயாரித்து படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே திரையிட்டு ரசிகர்களுக்கு சுவையான மினி மீல்ஸ் விருந்தை கொடுத்து விட்டது மங்காத்தா டீம். டிரெய்லரில் அஜித்தின் 'கெட்டப்' புதுமையான ஸ்டைலாக அமைந்து ரசிகர்களிடையே இந்தப் படத்தின் மீதான தாக்கத்தை அதிகரித்துவிட்டது. இந்தப் படத்தை எப்படியாவது ரசிகர்களுக்கு பிடித்தமாதிரியான ஒரு ஹிட் படமாக்கிவிடவேண்டும் என்பதுதான் அஜித் மற்றும் வெங்கட்பிரபுவின் மிகப் பெரிய ஆசை. இதற்காக பலவாறு யோசித்துச்செயல்பட்டு வருகிறார்கள். அப்படியான பலத்த யோசனைகளால் வெங்கட்பிரபு எடுத்திருக்கும் திடீர் முடிவு ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி தருவதாகும். அஜித்தின் 50ஆவது படம் என்பதால் இந்தப் படம் மிகவும் புதுமையாக இருக்கவேண்டும் என நினைக்கிறார் வெங்கட். முந்தைய அஜித் படங்களிலிருந்து ரொம்பவும் மாறுபட்டதாக எடுத்திடலாம். ஆனால் ரசிகர்களுக்கு மிகவும் பிடித்ததாக இருக்க என்ன செய்யவேண்டும்..? இந்தக் கேள்வியை ரசிகர்களிடமே வைத்தால் என்ன... என்ற யோசனை வெங்கட்பிரபுவுக்கு ஏற்பட்டுள்ளது.

ரசிகர்கள் கூறும் நிறை குறைகளையும், கருத்துக்களையும், விருப்பங்களையும் சேகரித்து அதன் அடிப்படையில் மங்காத்தாவின் திரைகதையை சிறப்பானதாக்கலாம் என்பதுதான் வெங்கட் பிரபுவின் விருப்பமாம். இந்த யோசனை அஜித்துக்கும் பிடித்துப்போக, தற்போது ரசிகர்கள் ஆலோசனைக் குழுவை அமைக்கும் பணி சூடுபிடித்துவிட்டது.

ரசிகர்களை நேருக்கு நேர் சந்தித்து, அவர்கள் கற்பனையில் இருக்கும் அஜித் படம் எப்படிப்பட்டது என்று அறிந்திட வெங்கட்பிரபு ரெடி... ரசிகர்கள் ரெடியா...?' தல' அழைத்த பிறகும் தாமதமா என்ன...





சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவரமைப்பின்(SDC) நிதியுதவியுடன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்ட விளையாட்டு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் தெய்வேந்திரராஜா, பேராசிரியர் என். நடராஜசுந்தரம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் SDCஇன் தலைமையதிகாரி ஹான்ஸ் பீற்றர் மேற்படி நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் ஹாட்லிக் கல்லூரிக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் அணிவீரர்களுக்கு கைலாகு கொடுத்து அறிமுகம் செய்வதையும் வெற்றியீட்டிய வீரருக்கு பரிசில் வழங்குவதையும் திறந்து வைக்கப்பட்ட விளையாட்டு நிலையத்தையும் படங்களில் காணலாம்.

# ஆஸி. முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளுக்கு உறுதிமொழிகள் எதனையும் வழங்கவில்லை

## அந் நாட்டின் குடிவரவு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய முகாம்களில் உள்ள இலங்கை அகதிகள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளமையைக் கண்டித்தே போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் கூரை மீது ஏறி போராட்டங்களை மேற்கொண்ட அகதிகளுக்கு தாம் எந்தவித உறுதிமொழிகளையும் வழங்கவில்லை என அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாம் அண்மையில் கிறிஸ்துமஸ் தீவிற்கு விஜயம் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது முகாமில் உள்ள மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் ஆன்மீக நிகழ்வுகள்

கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மிஷன் பெண்துறவிகள் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சமிதி மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ள ஆன்மீக நிகழ்வுகளில் பங்குபற்றி சிறப்பிக்கவுள்ளனர்.

இங்கு பஜனை,சிறப்பு ஆன்மீக உரைகள், தீபாராதனை போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மிஷன் தலைவர் பிரவ்ராஜிகா சுசந்த பிராணா மாதாஜி,செயலாளர் பிரவ்ராஜிகா ஆத்மதேவ பிராணா மாதாஜி ஆகியோர் வருகை தரவுள்ளனர். அனைவரும் வருகைதந்து அவர்களிடம் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு சமிதி செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)


Purview of JOBSNET
Ministry of Labour Relations and Productivity Promotion

20
வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Sep 2010 to Feb 2011

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், அனுராதபுரம் மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2010


# இரு வருடகாலமாக இராணுவத்தினர் முகாமிட்டிருந்த ஆலயம் நிர்வாகசபையினரிடம் ஒப்படைப்பு

சோபாலபிட்டி சிறீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கடந்த யுத்தகாலத்தின்போது முகாமிட்டிருந்த இராணுவத்தினர் கடந்த 18 ஆம்திகதி சனிக்கிழமையிலிருந்து ஆலய நிர்வாக சபையினரிடம் கோவிலை ஒப்படைத்துவிட்டு ஆலயத்திலிருந்து வெளியேறி உள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த இரு வருடகாலமாக சிறிய இராணுவமுகாமாகப் பாவிக்கப்பட்டு வந்த மேற்படி ஆலயத்தை விடுவிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் பூநகரி கட்டளைத் தளபதியோடு கலந்துரையாடியதை அடுத்து, ஆலயத்தின் பூசைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஏற்படுத்திவிட்டு, இவ் ஆலயத்தை இராணுவத்தினர் நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதனை அடுத்து ஆலய நிர்வாகிகள் இவ்வாலயத்தில் உள்ள விநாயகரை பாலஸ்தபானம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் இந்த ஆலயத்தின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு புலம்பெயர் உறவுகளிடம் தமது உதவிகளைக் கோரியுள்ளனர். (ஸ்ரீ-2-7-84)

# சப்ரகமுவ மாகாணத்தில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க அரசு அனுமதி

(கொழும்பு)

சப்ரகமுவ மாகாணத்தில் தனியார் பல்கலைக்கழகம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது என சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா, இந்தியா மற்றும் பெலராஸ் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இந் நிறுவனங்களின் உதவியுடன் மிக விரைவில் தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்கவுள்ளோம்

இப் பல்கலைக்கழகம் மருத்துவம், பொறியியல் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற துறைகளை கொண்டு இயங்கும் எனத் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மாத்தறை, இரத்தினபுரி மாவட்டங்களில் இலையான்கள் மூலம் தொற்று நோய்

(கொழும்பு)

மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இலையான்கள் அதிகரித்து தொற்று நோய்களைப் பரப்பி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 23 ஆம்தகிதி இடம்பெற்ற ஒத்திவைப்பு விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த இலையான்களைப் பொதுமக்கள் ஆழிப்பேரலை இலையான்கள் என அழைப்பதாகவும் இவை மாலை 6மணி தொடக்கம் இரவு 8 மணிவரை வீடுகளுக்குள் பிரவேசிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த வகையில் இந்த இலையான்கள் மாத்தறை மாவட்டத்தின் தெனியாய,பிடபெத்தர, ஹ லங்தாவ ஆதாரதெனிய ஆகிய பிரதேசங்களிலும் இரத்தினபுரி, ரக்வானை பிரதேசத்திலும் அதிகளவில் காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்த இலையான்கள் பொது மக்களின் கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி கண்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி சுகாதார அமைச்சர் மகிந்த அமரவீர இந்த இலையான்கள் தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இதனை ஒழிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அதுகுறித்து ஆராய்வதற்கு விடேச குழுவொன்றை அங்கு அனுப்பி உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறுவர் தின விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(வட்டக்கச்சி)

சிறுவர் தினத்தை முன்னிட்டு கல்மடுநகர் சுதாங்கணி முன்பள்ளியில் எதிர்வரும் முதலாம் திகதி சிறுவர் தினவிழாவும் விளையாட்டுப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்தவே இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

# பதவி வெற்றிடங்கள்

மோட்டார் சைக்கிள்



**இளைஞர் யுவதிகளே!**
**A/L எழுதிவிட்டுக் காத்திருக்கின்ற மாணவர்களே!**
**வாழ்க்கைப் பயணத்தில் வெற்றிச் சிகரத்தை அடைய ஓர் அரிய சந்தர்ப்பம்.**

யூனியன் அஷ்யூரன்ஸின் மாபெரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
பதவி வெற்றிடங்கள் எம்மிடம்
நிரப்ப நீங்கள் தயாரா?.....
இதோ!....... யாழ் பிரதான கிளையில்

கையடக்கத் தொலைபேசி



பதவி 5
சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி 4 தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்

வாகன கடன்வசதி



பதவி 3
சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர் → பதவி 2 தனிப்பட்ட நிதி ஆலோசகர்

பதவி 1
காப்புறுதி ஆலோசகர்

வெளிநாட்டு சுற்றுலாப் பயணம்



**தகைமைகள்**

- க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி.
- காப்புறுதி துறையில் /சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் (கட்டாயம் அல்ல)
- வன்னியில் இருந்து மீள் குடியமர்ந்த யுவதிகளுக்கு முன்னுரிமை

கணனி வசதி



**தகைமையுடன் நாம் எதிர்பார்ப்பது**

இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம்
திடசித்தம், உழைக்கும் விருப்பம்
தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

வீட்டு கடன் வசதி



**காலம் :** 04.10.2010
**நேரம் :** 09 மணி
**இடம்:** யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- A.அன்ரன் (விற்பனை முகாமையாளர்)
0773422716, 0212223753

(2549)


## மருதங்கேணி பாலத்தை உடனடியாக திருத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை

மருதங்கேணிப் பகுதியில் தற்போது மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால் பொது மக்களின் போக்குவரத்து வசதி கருதி மருதங்கேணியையும் புதுக்காட்டுச் சந்தியையும் இணைக் கும் மருதங்கணிப் பாலத்தை திருத் தித் தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவாணந்தாவிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய இவ்விடயம் தொடர்பில் உடனடி அவதானத்தைச் செலுத்திய அமைச்சர் டக்ளஸ்தேவா னந்தா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொண்டு இப் பாலத்தை உடனடியாகத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் இப்பாலத்தின் திருத்தப் பணிகளில் அப்பகுதி மக்களுக்கு ஒரு தொழில் வாய்ப்பாக அப்பகுதி மக்களையே ஈடுபடுத்து மாறும் உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (ஸ்ரீ)

## சட்டவிரோதமாக ஆமைகளைக் கடத்த முயன்றோருக்கு அபராதம்

வடமராட்சி பொற்பதி கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் கடலாமைகளைப் பிடித்து கொன்று அதனை இறைச்சியாக்கி முச்சக்கர வண்டியில் கடத்த முயன்ற குடத்தனை பொற்பதியைச் சேர்ந்த இருவர் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் இவர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ்மகாதேவா, சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து முதலாவது குற்றத்திற்கு 25ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஆறுமாத கால சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றத்திற்காக 10ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத கால சிறைத்தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-2-24)

### க.பொ.த (சா/த) பரீட்சைக்கு

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 3274 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்

(முல்லைத்தீவு)

எதிர்வரும் டிசம்பர் மாத்தில் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு முல் லைத்தீவு மாவட் டத்திலிருந்து 3 ஆயிரத்து 274 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளதாக முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் மா. தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

இதில் பாடசாலை பரீட்சார்த்திகளாக 2 ஆயிரத்து 716 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்தி களாக 558 பேரும் தோற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பரீட்சைக்கென 10 இணைப்பு நிலையங்களும் 25 பரீட்சை நிலையங்களும் செயற்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


# kalaimagal International College

NOTHING IS IMPOSSIBLE

**கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புக்களுக்கும் விண்ணப்பப்படிவங்கள் செப்ரம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.**

## எமது சிறப்பான செயற்பாடுகளாவன:-



- முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழுநேர தனியார் பாடசாலை (English Medium)
- Play Group முதல் Grade - 05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade- 06 முதல் G.C.E.(A/L) வரை இலங்கைப் பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை.
- ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- பிரத்தியேக சீருடை
- சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- கணனி ஆய்வு கூடம்
- விஞ்ஞான ஆய்வு கூடம்
- நூலகம்
- சாதாரண மக்களும் முகம் கொடுக்கக் கூடிய மிகக் குறைந்த கட்டண வசதி
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழி மூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கிலமொழி மூலமும் சிங்களம் விருப்பத்திற்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- அரச பாடசாலைகளின் நேரசூசியைப்பின்பற்றும் கல்விக் கொள்கை
- கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு
- மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்புவிழா, கலை விழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள், சாவகச்சேரி,கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த. (உ/த) வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டு உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G,U.K.G போன்ற வகுப்புக்கள் மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக் கிளைகளில் இணைந்து கொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வடமாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 விண்ணப்பங்கள் செப்ரம்பர் 15 முதல் உள்வாங்கப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும், சமர்ப்பிக்கவும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

The Director.
**kalaimagal International College**
Church Lane, Kulappiti Junction,Kokuvil.
தொ.பே: 021 3215785, 0778834592.

(சி-1284)

பாலங்களைக் கட்டுவதற்குப் பதில் சுவர்களை அமைத்து விடுவதால்தான் பல மனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள். – ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# புலம்பெயர் தமிழர் என்பதன் சூக்குமம் யாதோ?

"புலம்பெயர் தமிழர்கள்" என்பது இன்று அதிகம் உச்சரிக்கப்படும் சொற்பதமாக உள்ளது. இவ்விதம் புலம்பெயர் தமிழர்கள் என்ற பதம் அதிகம் உச்சரிக்கப்படுவதற்கு எங்கள் பொருளாதாரத்திலும், அரசியலிலும் அவர்கள் கொண்டுள்ள வகிபங்கே காரணமாகும்.

பல வருட யுத்த சூழ்நிலையிலும் இலங்கைத் தமிழர்கள் சீவியம் நடத்தினர் எனில், அதற்கு புலம்பெயர் தமிழர்களே மூல காரணம் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

அதேநேரம் அரசியல் பங்களிப்பும் அவர்களிடம் நிறையவே உண்டு. இங்கு அவர்களின் அரசியல் பங்களிப்பு என்பது நாடுகடந்த தமிழீழம் என்பதை மட்டும் வைத்துக் கூறப்படுவதல்ல.

வன்னிப் பெருநிலப்பரப்பில் பெரும் போர் நடந்தபோது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தாய் நாட்டில் தமிழினம் படும் அவலத்தைப் பகிரங்கப் படுத்தி உலகமே நீதியுரை என்று கோஷம் போட்டவர்கள் அவர்கள்.

அவர்களின் உணர்வுகள் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டன. அதன் விளைவாக இலங்கை அரசு தொடர்பில் சர்வதேச சமூகத்தின் பார்வையும், அணுகுமுறையும் எதிர்க்கணியமாக அமைந்தன.

இந்த உண்மைகளுக்கு அப்பால், இப்போதெல்லாம் புலம்பெயர் தமிழர்கள் தொடர்பிலும் அவர்களின் அரசியல் வகிபாகம் பற்றியும் சிலர் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலை அபத்தமானது. அதே நேரம் புலம்பெயர் தமிழர் என்ற சொற்பதமானது எங்கள் உறவுகளை பிரித்தறுக்கும் நோக்கில் கையாளப்படுவதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

வெளிநாடுகளில் இருக்கும் எமது சகோதரர், எமது பெற்றோர், எமது பிள்ளைகள் இவர்கள் அனைவருக்கும் நாங்கள் கொடுத்த பதம்தான் புலம்பெயர் தமிழர் என்பதாகும்.

எப்படி இருக்கிறது எங்கள் உறவுநிலை! மகனே! இந்த நாட்டில் உனக்குப் பாதுகாப்பில்லை. நீ வெளிநாட்டிற்குப் போய் அங்கு வாழ் என்று வற்புறுத்தி பெற்ற பிள்ளையை அனுப்பி வைத்தவர்கள் நாங்கள்.

மகனே! நீ அனுப்பிய பணம் வந்து சேர்ந்தது. யுத்த சூழலிலும் உன் உதவியால் நாங்கள் சீவிக்கின்றோம் எனக் கடிதம் அனுப்பி வைத்தவர்களும் நாங்கள்தான்.

இப்போது மட்டும் புலம்பெயர் தமிழர் என்று சொல்வதன் சூக்குமம் என்ன?

எல்லாம் அரசியல் எனும் மாமரத்தில் தொங்குகின்ற மாங்கனிகளை மற்றவர்களுக்குத் தெரியாமல் நானே பறித்து நானே சாப்பிட்டு மகிழத்தான். வேறு என்ன?

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் வாழ்நாள் முழுவதும் சிறையில்

## புதிய சட்டத்தால் ஏற்பட்ட பரிதாபம்

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், பேரறிவாளன், ராபர்ட், பயஸ், ஜெயக்குமார் போன்றோர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 20 ஆண்டு காலமாக சிறையில் உள்ள இவர்கள் தங்களது தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யவேண்டும் என்றும் ஆயுள்தண்டனையாக மாற்றி தங்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் கேட்டு சட்டப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களின் விடுதலை முயற்சியில் தடை ஏற்பட்டுள்ளது. உலகத்தில் பல நாடுகளில் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் தூக்குத்தண்டனைக்கு எதிரான கருத்து அதிகமாகி வருகிறது. இந்திய அரசும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளை தூக்கிலிடாமல் நிறுத்திவைத்துள்ளது.

தூக்குத் தண்டனை சட்டத்தை ரத்து செய்துவிட்டு அதற்கு பதில் அதி முக்கிய குற்றவாளிகளை வெளியே விடாமல் இருப்பதற்காக தூக்குத் தண்டனை சட்டத்துக்குப்பதிலாக வாழ்நாள் முழுவதும் சிறையில் வைப்பதற்கான ஒரு புது சட்டத்தை கொண்டு வர மத்திய அரசு முடிபு செய்துள்ளதாம்.

இத்தகவல் அறிந்த ராஜிவ் கொலை குற்றவாளிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தாங்கள் இறக்கவும் முடியாது வெளியேயும் வர முடியாது என்பதால் நொந்து போய் தங்கள் உறவினர்களிடம் கவலையை பகிர்ந்து வருகின்றனர். (ந-5)

# இராணுவ நீதிமன்றத் தீர்ப்பு சட்டத்திற்குரிய தீர்ப்பல்ல

இராணுவ நீதிமன்றம் என்பது நிறுவன ரீதியிலான சட்ட நடைமுறை எனவும் அதன் தீர்ப்புக்களை நாட்டின் சட்டத்துக்குரிய தீர்ப்புக்களாக கருதி தண்டனை வழங்க முடியாதென சிரேஷ்ட சட்டத்தரணி எல்மோ பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தினால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டு அல்லது 6 மாதங்களுக்கு மேல் அவர் சிறையில் அடைக்கப்பட்டால் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகும் நிலைமை ஏற்படுமா எனக் கேட்டபோதே சட்டத்தரணி பெரேரா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை திணைக்களமோ, நிறுவனமோ தமது ஊழியர்கள் தொடர்பில் நடத்தும் உள்ளக ஒழுக்காற்று விசாரணையாகவே கருத வேண்டும். அவ்வாறான விசாரணை நடத்தப்பட்டவுடன் ஊழியர்களை சிறையில் அடைக்க முடியாது. அவ்வாறு தண்டனை வழங்க வேண்டுமாயின் குற்றவியல் சட்டத்தின் கீழ் அந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் எல்மோ பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# பொன்விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலத்தின் 50 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, கயிறு இழுத்தற் போட்டி மற்றும் பாடசாலை மட்டப் போட்டிகள் என்பன நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற அணிகளின் விபரம் வருமாறு,

மென்பந்து கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தை யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யா/ புனித ஹென்றியரசர் கல்லூரியும் மூன்றாம் இடத்தை யா/ சில்லாலை றோ.க. வித்தியாலயமும் வெற்றியீட்டியுள்ளது.

மேலும் உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை யா/ புனித ஹென்றியரசர் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மூன்றாவது இடத்தை யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றுள்ளது.

அத்துடன் கயிறு இழுத்தற் போட்டியில் ஆண்கள் பிரிவில் யா/ புனித ஹென்றியரசர் கல்லூரியும் இரண்டாம் இடத்தை யா/ சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயமும் மூன்றாவது இடத்தை யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க. வித்தியாலயமும் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தை யா/ சுதுமலை சின் மயபாரதி வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை யா/ பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயமும் மூன்றாம் இடத்தை யா/ ஆனைக்கோட்டை றோ.க.த.க. வித்தியாலயமும் வெற்றி பெற்றுள்ளதாக ஆனைக்கோட்டை யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலய அதிபர் என். தனபாலசிங்கம்அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# எது நிரந்தரம்? பணமா? குணமா?



ஒரு பொருளாக மதிக்கத்தகாதவரையும் மதிப்புடையவராகச் செய்வதாகிய பொருள் அல்லாமல், சிறப்புடைய பொருள் வேறு இல்லை.

ஆக, இந்த உலகம் பொருள் நிறைந்த உலகம்; இச்சமூகம் நுகர்வு சமூகம் (consumeristic society) ஒவ்வொருவரும் பொருள் ஈட்ட வேண்டும்; அதனால் வருகின்ற இன்பத்தை நுகர வேண்டும் என்ற ஒரே குறிக்கோளில் தான் ஓடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய சித்தாந்தமாக பொருள் பணம் இருக்கிறது.

ஆனால் அதேவேளையில் அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்ற முதல் பகுதியை இவர்கள் மறந்து விடுகிறார்கள். ஆம், பொருள் உள்ளவருக்கு இவ்வுலகம் மட்டும் தான் சொந் தம். ஆனால் அருள் உள்ளவருக்கு இவ்வுலகமும் அவ்வுல கமும் சொந்தம்.

அப்படியென்றால் பணமும் பொருளும் தீமையானவையா? என்றால் இல்லை. ஆனால் பணமும் பொருளும் மட்டுமே உலகம்; அது ஒன்றே வாழ்வின் மதிப்பீடு என்று எண்ணி தனக்கு மட்டுமே அவைகளை வைத்து வாழ்வதும்; பணத்தையும் பொருளை கொண்டு ஏழைகளை வஞ்சிப்பது தான் பெரிய குற்றம் இதற்கு மன்னிப்பே கிடையாது.

ஆம், இன்றைய நற்செய்தி இதைத்தான் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. இன்றைய நற்செய்தியிலே இரண்டு வகை மனிதர்கள்.

1.பணம் படைத்த பணக்காரன்

2. ஏழ்மைக்கு அடையாளமானலாசர்

இவர்கள் இருவரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். ஆனால் இருபெரும் துருவங்கள், பணக்காரன் பணத்தின் விளைவுகளை அனுபவிக்கிறான்.

தினமும் அறுசுவை உணவு, பட்டாடை, உயர்வகைமது என்பன. ஏழைய லாசர் ஏழ்மை யின் விளைவுகளை அனுபவிக் கிறான். உடலெங்கும் புண், உண்ண உணவில்லை, மனி தனாகவே மதிக்கப்படாத அவல நிலை.

அப்படியென்றால் ஏழ்மை கடவுளால் படைக்கப்பட்டதா? இல்லை. அது மனிதனால் உருவாக்கப்பட்டது. காரணம் படைப்பிலே எல்லாம் நல்லதென இறைவன் கண்டார்.

பணக் காரரின் சுரண்டல்களாலும், பதுக்கல்களாலும், ஏமாற்று வேலைகளாலும், பகிராத தன்மையாலும் தான் ஏழ்மை உரு வாகிறது.

அந்தப் பணக்காரன் ஏழை லாசர் தன் வீட்டு வாசலில் இருப்பதையே கண்டுகொள்ளவில்லை. அவனை ஒரு மனிதனாகவே மதிக்கவில்லை.

## பரமபிதா காட்டிய பாதை

இவன் ஒரு வேளை ஆண்டவரின் வார்த்தையை மறந்திருப்பான் "அறிவிலியே நீ சேர்த்து வைத்தது யாருக்கு? இன்றிரவே உன் உயிரை கடவுள் எடுக்கப்போகிறார்" ஆம், அவனும் இறந்தான் ஏழை லாசரும் இருந்தான்...

இங்கே தான் ஒன்றை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லோருக்கும் இறப்பிற்குப்பின் தான் ஞானம் வருகிறது. புத்தி தெளிகிறது.

எனவே பணமும் பொருளும் ஒரு மனிதனுக்கு வாழ்வு தராது. மனமும் குணமும் தான் ஒரு மனிதனுக்கு வாழ்வு தரும். கவிஞன் பாடுவது நம் நினைவுக்கு வரவேண்டும்.

பணம் என்னடா பணம் குணம் தானடா நிரந்தரம். எனவே குணம் தான் நிரந்தரம் பணம் பறந்து விடும். பணம் இருந்தாலும் பணத்தைக் கொண்டு குணத்தைச் சம்பாதித்துக்கொள்வோம்.

ஜோன் ரொபேர்ட்

# மிகப் பாரிய சர்வதேச நிதியின் சக்தி

ஒறிக்ஸ் குறூப் ஒப் கம்பனி ஆனது உலகிலுள்ள பாரிய குத்தகைக் கம்பனியும் ஜப்பானின் இரண்டாவது பாரிய நிதிச் சேவை வழங்குனருமான ஜப்பான் ஒறிக்ஸ் கோர்ப்பரேஷனின் பக்கபலத்துடனேயே இயங்குகின்றது. அதுவே எங்கள் பலமும் சக்தியும் ஆகும்.

+ நிலையான வைப்புகளுக்கு வருடத்திற்கு 11.00% (வ.மொ.வ.வீ.) அதிகூடிய வட்டி

12 மாதங்கள் நிறைவான வட்டி (வ.மொ.வ.வீ. 11.25%)

## லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்

LOLC குறூப் கம்பனி

100/1, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ராஜகிரிய.

LOLC

அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிட்டெட் ஆனது 1988, 78ஆம் இலக்க நிதிக் கம்பனி சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்ட பிச் ரேட்டிங் லங்கா கம்பனியிடம் A-(lka) தரத்தைப் பெற்றுள்ளது. இணைக்கப்பட்ட திகதி டிசெம்பர் 13, 2001.

அவசர அழைப்பு :

077 2317575

077 2370992


# இதயம் காக்கும் பழங்கள்

இன்றைய நவீன உலகில் மக்களை இருவிதமான நோய்கள் அதிகமாக ஆட்டிப் படைக்கின்றன.

அவைநீரிழிவு, இரத்த அழுத்தம்.

இரத்த அழுத்தமானது இதயத்தைப் பாதித்து இதயம் சம்பந்தப்பட்ட நோய்களை உருவாக்குகிறது. இதயநோய் வந்தால் குணப்படுத்தவும் ,வராமல் தடுக்கவும் இயற் கை நமக்களித்த கொடைதான் காய்களும் கனிகளும்.

சித்தர்கள் முதல் தற்கால மருத்துவர்கள் வரை பரிந்துரைக்கும் ஒரே வாசகம் தான் உணவில் கீரை , காய்கனிகளை அதிகம் சேருங்கள் என்பது.

இதயத்திற்கு இதம் தரும் பழங்கள் பல உள்ளன. அவை இதயத்தைப் பலப்படுத்தி சீராக செயற்பட வைக்கும். அப்பிள் பழம் இதயத்திற்கு உற்சாகத்தையும், புத்துணர்வையும் தர வல்லது.

தினமும் ஒரு அப்பிள் சாப்பிட்டு வந்தால் மருத்துவரை அணுக வேண்டிய அவசியமில்லை என்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. "An apple a day , keeps the doctor away" இதிலிருந்து அப்பிளின் மருத்துவப் பயன் நமக்குப் புரிய வரும். இதுபோல புத்தம்புது திராட்சை, அன்னாசி, ஒரேஞ்சு, சீதாபழம் ஆகியவை இதயத்தைப் பலப்படுத்தும்.

வாதுமையும் தேங்காய் நீரும் இதயத்திற்கு ஊக்கம் அளிப்பவை.

நெல்லிக்கனி இதயத்திற்கு மிகுந்த பலனைத் தரவல்லது. ஒரு நெல்லிக்கனியில் 4 அப்பிளுக்கு இணையான சத்துக்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனை ஜாமாகவும் இலேகியமாகவும் செய்து சாப்பிடலாம். மார்பில் வலியும், மரத்துப்போன உணர்வும் ஏற்பட்டால் உடனே திராட்சைச் சாறு அருந்த லாம்.

இது வலியைக் குறைக்கும். இதய நோயாளிகள் தினமும் திராட்சைச்சாறு பருகுவது நல்லது.

அது நோயைக் குணப்படுத்த உதவும்.

ஒரேஞ்சு பழமும் அதன் பழச்சாறும் இதயம், மார்புநோய் போன்றவற்றிற்கு சிறந்த டொனிக் ஆகும். இதனை இதயநோய் சம்பந்தப்பட்ட நோயாளிகள் தினமும் அருந்துவது நல்லது. அது போல உலர்ந்த திராட்சை, பேரீச்சை, அத்திப்பழம் போன்றவை இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன் இதயத்தைப் பாதுகாக்கவும் செய்கிறது. உடலில் உள்ள அதிக உப்பைக் குறைத்து இரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கனிகளுக்கு உண்டு. இதயத்திற்கு இதமான கனிகளை உண்டு இதயத்தைப் பாதுகாப்போம்.




# தற்போது, வங்கியொன்று அடகிற்கு வழங்கும் அதி கூடிய தொகையை சம்பத் வங்கி வழங்குகின்றது

கெரட் 24ற்கு 30,000/-

கெரட் 22ற்கு 27,000/-

வியாபாரச்சந்தையின் அதிகுறைந்த மாதாந்த 1.17% வட்டிக்கு

சம்பத்



அடகுச் சேவை

அழையுங்கள் ...2 30 30 50

සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
SampathBank



ESPN

Lumala

யாழ். நகரில் வியாபாரத்துறையில் 50 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பெற்ற நிறுவனத்தினர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னி பெருநிலப்பரப்பு மக்களுக்கு உதவும் முகமாக தற்போது கிளிநொச்சியில்



யப்பானிய தொழில்நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண் ஸ்போட்ஸ், யுனியர் துவிச்சக்கர வண்டிகளும், அதன் உதிரிப்பாகங்களும்.

இந்தியாவில் உற்பத்தியாகி உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கீரோ ஆண், பெண் ஸ்போட்ஸ், யுனியர் மிதிவண்டிகளும் உதிரிப்பாகங்களும்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌவுன்டின், சொப்பர் மிதிவண்டிகளும், பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்

## இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்

52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.

Tel: 021 222 3096 Fax: 021 222 4394

# சுரேஷ் ரெய்னா 'ரன் மழை'; இறுதிப் போட்டியில் சென்னை

## டக்வேத் லூயிஸ் முறையில் பெங்களூர் தோல்வி

(டர்பன்)

ரெய்னாவின் அதிரடி கைகொடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி டக்வேத் லூயிஸ் முறையில் வெற்றி பெற்று சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

முன்னணி வீரர்களின் சொதப்பலான ஆட்டத்தினால் அதிர்ச்சித் தோல்வியடைந்த பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி அரையிறுதியுடன் விடைபெற்றது.

சம்பியன் லீக் இரண்டாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடை பெற்று வருகிறது.

இத் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் டர்பனில் நடை பெற்றது. இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 2.5 ஓவர்களில் 15 ஓட்டங்களை எடுத்த போது மழைகாரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

தொடர்ந்து இரு மணி நேரம் மழை நீடித்தமையால் போட்டி தொடருவதில் தாமதமானது.

இந் நிலையில் மழைவிட மீண்டும் போட்டி ஆரம்பமானபோது டக்வேத் லூயிஸ் முறையில் இரு அணிகளுக்கும் தலா 17 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 3.5 ஓவர்களில் 19 ஓட்டங்களை எடுத்தபோது ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மைக்கெல் ஹசி 06 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சுரேஷ் ரெய்னா அதிரடியாக துடுப்பெடுத்தாட சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய முரளிவிஜய் 32 பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய தோனி 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அடுத்து மோர்கல் களமிறங்க மறுமுனையில் சுரேஷ் ரெய்னா 29ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்து பவுண்டரி, சிக்ஸர் என ரெய்னா ரன்மழை பொழிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 17 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 174 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் சுரேஷ் ரெய்னா 48 பந்துகளில் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 94 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

பந்துவீச்சில் வினேய்க் குமார் 2 விக்கெட்டுக்களும் பிரிஸ், வைட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 17 ஓவர்களில் 176 ஓட்டங்களை (டக்வேத் லூயிஸ் முறையில் ஒரு ஓட்டம் அதிகம்) எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி ஆரம்பமுதலே சரிந்தது.

முன்னணித்துடுப்பாட்ட வீரர்களான டிராவிட் பூச்சியத்துடனும் உத்தப்பா, றெய்லர் தலா 04 ஓட்டங்களுடனும் வெளியேற பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 3.3 ஓவர்களில் 12 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய ஹோலி 14, வைற் 13, ஓட்டங்களுடனும் பிரிஸ் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்து நிலைத்து நின்று ஆடத்தவறினார்.

மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பாண்டி சிறப்பாக துடுப்பெடுத்தாடி அரைச்சதம் கடக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 13.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் பாண்டி 44 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 16.2 ஓவர்களில் 123 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து டக்வேத் லூயிஸ் முறையில் 52 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.



பந்துவீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக பொல்லிங்கர் 3 விக்கெட்டுக்களையும், முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்கல், பாலாஜி, அஷ்வின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இப் போட்டியில் ரன் மழை பொழிந்த சென்னை சுப்பர்கிங்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளம் இட்ட சுரேஷ் ரெய்னா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.


## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர்

துரைசிங்கம் விஜயமனோகர்

அவர்களுக்கு எம் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

கச்சேரி முற்றத்தில் களைப்பின்றி உழைத்தமகன்
கடும் முயற்சி, பிறர் உதவி
உந்தனது வழித்தடங்கள்
சுனாமி அழித்த உந்தன் சூழலுக்குள்
தழைத்தெழுந்த ஆலமரம்
ஐயோ அலறுகிறாள் அன்பான உன்னவளும்
எங்கே எம் மனோ என்று ஏங்குதய்யா கச்சேரி
திட்டமிடல் கிளையோ
திணறுதையா உன் பிரிவால்.

பிரிவால் துயருறும்
அரச அதிபர், பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள்,
சக அலுவலர்கள்
மாவட்ட திட்டமிடல் செயலகம் கச்சேரி
கிளிநொச்சி.

(2556)

## கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர்

துரைசிங்கம் விஜயமனோகர்

அவர்கள் நேற்று 25.09.2010 அன்று அகால மரணமானார். அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

அரச அதிபரும் சக உத்தியோகஸ்தர்களும்
மாவட்ட செயலகம் ,கிளிநொச்சி.


## 'எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் கடினமான பயணம்'

### இங்கிலாந்து தொடர் குறித்து அப்ரிடி



(லாகூர்)

இங்கிலாந்து சுற்றுப்பயணம் தனது வாழ்க்கையில் மிகவும் கடினமான பயணமாக அமைந்தது என பாகிஸ்தான் அணித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 1:3 என்ற கணக்கிலும் இருபது-20 போட்டித் தொடரை 0:2 என்றக் கணக்கிலும் ஒருநாள் தொடரை 2:3 என்ற கணக்கிலும் பறிகொடுத்தது.

அத்துடன் அடுக்கடுக்கான சூதாட்டக்குற்றச்சாட்டுக்கள், பந்தை சேதப்படுத்தியதாக எழுந்த புகார் என்று பல்வேறு கசப்பான அனுபவங்களைச் சந்தித்த பாகிஸ்தான் அணி இங்கிலாந்து சுற்றுபயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் தாயகம் திரும்பியது.

இந்த 4 மாத காலச் சுற்றுப்பயணம் தனது கிரிக்கெட் வாழ்கையில் மிகவும் கடினமானதென்று பாகிஸ்தான் அணியின் தலைவர் சயிட் அப்ரிடி கூறியுள்ளார். அவர் நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

சர்ச்சைகளால் இந்தத் தொடர் எங்களுக்கு மிகவும் கடினமாக அமைந்தது அவற்றை சமாளிப்பதற்கு கஷ்டமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் ஹோட்டலை விட்டு வெளியே சென்று திரும்பும் போதெல்லாம் எங்கள் மீது விமர்சனங்களைத் தொடுத்தனர். ஆனால் இவ்வளவு கஷ்டமான சூழலிலும் கூட வீரர்கள் அனைவரும் ஒற்றுமையைக் கட்டிக்காத்தார்கள்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் கடுமையான போராட்டத்தை வெளிப்படுத்தினார்கள். சர்ச்சைகள் நிறைந்த இந்த சுற்றுப்பயணம் எனது 14 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் கஷ்டமான சுற்றுப் பயணமாக அமைந்தது.

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற நான் மீண்டும் டெஸ்ட் போட்டிக்கு திரும்புவது குறித்து சிந்தித்து வருகிறேன். அணிக்கு நான் தேவைப்பட்டால் தென்னாபிரிக்காவுக்கு எதிராக (ஒக்டோபர்-நவம்பர்) நடைபெறும் டெஸ்ட் தொடரில் விளையாடுவது குறித்து பரிசீலிக்கலாம். இவ்வாறு அப்ரிடி கூறினார்.



# கலைமகள் அழகு நிலா

பயிற்சி நிலையம்

ஏழு நாட்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சி யின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். இப் பயிற்சி கற்றுக் கொள்வது இலகுவானதும் அதிக வருமானம் தரக் கூடிய தொழிலாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும்.

பயிற்சிகள்

- ★ Facial (ஏழு வகை)
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Waxing
- ★ Hair Stratening (2 வகை)
- ★ Hair Perming (2 வகை)
- ★ Hot oil Massage
- ★ Hair Cutting
- ★ Hair dye
- ★ Hair Colouring
- ★ Pedeicure Manicure
- ★ கறுப்புக் காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்
- ★ Bleaching
- ★ Bridal make up (6 வகை)

தொடர்புகள்: 077 3719071 021 4908151

பயிற்சிக் கட்டணம்:- 4000/=
பயிற்சி ஆரம்பம் :- 01/10/2010
பயிற்சி நேரம் :- 9 மணி - பி.ப.4 மணி வரை

கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-1283)

# இலங்கையில் நடந்த யுத்தக் குற்றம்...

அதற்கு முன்னர்இடம்பெற்ற யுத்தக் குற்றங்களுக்கு இலங்கைப் படையினரே காரணமாவர்.

யுத்தத்தின் பின்னர்தமது எதிராளிகளான விடுதலைப்புலிகளின் போராளிகளைத் தண்டனைக்குட் படுத்தும் அரசு போர்க் குற்றத்தைப் புரிந்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகப் பல்கலைக் கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழு தமக்கு சாட் சியமளிப்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தத் தவறியுள்ளதாகவும் அமெரிக்கப் பல்கலைக்கழகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# ஐ.நாவுடன் இணங்கிக்...

ஆண்டு பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது அரசாங்கமும் ஐக்கிய நாடுகளும் இணைந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண் டும் என வலியுறுத்திய பான் கீ மூன்,

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் மக்கள் ஆளும் கட்சிக்கு வழங்கிய ஆணையை அரசு சரியான முறையில் பயன்படுத்தி நாட்டின் நல்லிணக்கத்தையும் அரசியல் தீர்வுத் திட்டத்தையும் ஏற்படுத்த வேண்டும் என பான் கீ மூன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை வடக்கில் அபிவிருத்தி மற்றும் கல்வி நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட வேண்டியதும் மிகவும் அவசியமானது எனக்கூறிய மகிந்த ராஜபக்ஷ, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பிலும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது விளக்கமளித்துள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு நியமனம் குறித்து கலந்துரையாடப்பட்டது தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ந-5)

# மத்திய அரசின் கீழ்...

எனினும் எந்த மாகாண சபைக்கும் இது வரை பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்படவில்லை. அதே வேளை மாகாண சபைகளுக்கு வழங்கப் பட்டுள்ள காணி அதிகாரங்களிலும் உத்தேச அரசியல் அமைப்புத் திருத்தங்களில் புதிய ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் இந்த அரசியல் அமைப்புத் திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்படலாம் என அரசியல் அமைப்புத் தகவல்கள் கூறுகின்றன.(ந-5)

# புலிகளின் சர்வதேச...

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பை இல்லா தொழிப்பதற்கு நோர்வே அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நோர்வேயில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் இயங்குவதை நாங்கள் உறுதி செய்துள்ளோம்.

எனவே அவர்களை நோர்வே அரசு எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். சர்வதேச பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு உலகத் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

இதனடிப்படையில் நோர்வே அரசு தனது அரசியல், புவியியல் எல்லைக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்புத் தலைவர்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த நோர்வேப் பிரதமர், நோர்வேயில் இயங்குவதாகக் கூறப்படும் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பெயர் விபரங்களைத் தமக்குத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். (ந-5)

# இலங்-இந்...

தார். இலங்கை, இந்திய கடற்படைத் தளபதிகள் பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுவது குறித்து ஆராயப்படுவதற்காக இந்திய -இலங்கைக் கடற்படையினருக்கிடையில் அவசர சந்திப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ந-5)

# மிசேல்...

உணவு உற்பத்தி நிலையத்தில் இவ் விருந்துபசார வைபவம் இடம் பெற்றது.

சுமார் 40 நாடுகளின் முதல் பெண்கள் இதில் பங்கேற்றனர். அந்த வகையில் மிசேல் ஒபாமாவின் அழைப்பை ஏற்று சிராந்தி ராஜபக்ஷவும் இவ் விருந்துபசார வைபவத்தில் கலந்து கொண்டார்.

இருவரும் பரஸ்பரம் அன்பைப் பரிமாறிக் கொண்டார்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை பயங்கரவாதத்திலிருந்து விடு[illegible] அமைதிப் பூங்காவாக மாறியுள்ளதுடன் அபிவிருத்தியை நோக்கி விரைந்து பயணிக்கின்றது என்று கூறி சிராந்தி ராஜபக்ஷவுக்கு மிசேல் ஒபாமா பாராட்டுத் தெரிவித்துள்ளார். (ந-5)

# ஆலோச...

தவிர்த்துக் கொண்டுள்ளார்.

அவரின் இந்தச் செயற்பாடு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பான் கீ மூன் செயலாளர் நாயகமாகப் பதவியேற்பதற்கு முன்னரே மகிந்தவுடன் நெருக்கமான தனிப்பட்ட உறவுகளைப் பேணி வந்தவர் எனவும் அதனால்தான் இலங்கை விடயத்தில் அவர் தடுமாறுகின்றார் எனவும் அது [illegible] தெரிவித்துள்ளது. (ந-5)

# GNANA (ஞானா) BEAUTY PARLOUR

Have a Convocation makeup and get an offer facial அதிநவீன முறையில்

- ☆Bridal / Convocation / Dance makeup
- ☆Facial for different types of skin with treatment.
- ☆Manicure & pedicure.
- ☆Hair colouring,cutting & Styles /Head massage & treatment
- ☆Threading / waxing
- ☆Wedding / Birthday cake orders are Under taken

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
162, ஆடியபாதம் வீதி, (பொற்பதிச் சந்திக்கு அண்மையில்)
கொக்குவில். T.P.:0212223885

(2539)

# European College of higher Studies

மாணவர்களின் நலன் கருதி அவர்களுடைய அறிவினை விருத்தி செய்யும் வகையில் லண்டனில் இருக்கும் கல்லூரிகளில் எமக்கு தொடர்பான கல்லூரிகளில் இருந்து அதி குறைந்த கட்டணங்களுடன் IELTS அவசியமற்ற புதிய வீசா நடைமுறையினை கொண்டு வருகின்றோம்.

எமக்கு தொடர்பான பிரதான கல்லூரிகளான

- Bickenhall College of computing
- Union College
- London Victoria College
- London Richmond College
- Interlink College
- Thames College of Technology

என்பவற்றுடன் இணைந்து

- ★Business Management
- ★Hotel Management
- ★Hospitality Management
- ★Business Administration
- ★International Law and Order
- ★Building Construction
- ★Nursing
- ★Information Technology
- ★Computer Multimedia
- ★Computer Hardware
- ★Software

போன்ற பாடங்களையும் இது தவிர்ந்த வேறுபாடங்களுக்கான அனுமதியினை 2 1/2 வருடத்துக்கு குறையாமல் Sponsor வசதியுடன் வீசாக்களை பெற்றுத் தருகிறோம்.

அனுமதி இலவசம்

தொடர்புகளுக்கு:

European College of higher Studies
315 1/2, Parameshwara Junction,Palaly Road,Jaffna.
Tel.No.:0771224473,0711841084, 0213734747, 0771882507

(2553)

# நன்றியும் பாராட்டுதலும்

யுத்தம் நடைபெற்ற பிரதேசத்தில் எமது தனியார் பேருந்து உரிமையாளர்களின் கைவிடப்பட்ட பேருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கும் எமது தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் சார்பாகவும் எமக்காகவும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த கௌரவ அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ சந்திரகுமார் முருகேசு (தோழர் அசோக்) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.





தனியார் பேருந்து
உரிமையாளர் கழகம், கிளிநொச்சி

(கி/1287)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.